# மாநில சுயாட்சி ஒன்று தான் அழிவிலிருந்து காப்பாற்றும்

உலகில் ஒன்றிற்கு மேலான இனங்கள் வதியும் ஒவ்வொரு நாட்டிலும் சமஷ்டி அல்லது மொழிவழி மாநில சுயாட்சி முறையே நிலவுகின்றது என்பதை இன்று சாதாரண அரசியல் ஞானம் படைத்த எவருமே ஒத்துக்கொள்வர்.

நோக்குடன் தமிழ் தலைவர்களுடன் சேர்ந்து ஆராய்ந்து பிரதேச ஆட்சி முறைத் திட்டத்தை பண்டா—செல்வா ஒப்பந்தத்தில்

ருல் அது மிகையாகாது. மேலும் இத்திட்டம், தற்போது இப்போதைய ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாகாண சபை முறையிலும்

சேர்ந்த ஜெல்டன் ரணராஜாவின் பேச்சு அமைந்திருக்கிறது.

'பண்டா-செல்வா ஒப்பந்தத்தை நிராகரிப்பதற்கு எவர் காரணமா

உருவாக்கிய ஒப்பந்தத்தை அமுலாக்க இடையூறு விளைவித்திராதிருந்தால், இன்றைய அவல நிலையைத் தவிர்த்திருக்

## அட்டூழியம் நடந்த போதும் கூட்டணி பேச்சிலிருந்து வெளியேறாதது ஏன்?

ஏனெனில் அத்தகைய நாடுகளில் ஒற்றையாட்சி முறைமூலம் சகல இனத்தவர்களுக்கும் சமசந்தர்ப்பம் அளிப்பது என்பது சாத்தியமல்லாத ஒன்றாகும்.

இவற்றை நன்குணர்ந்த அமரர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா, முன்மாதிரியான ஓர் ஒளடதமாக, இனங்களுக்குள் சமரசத்தை ஏற்படுத்தும்

வரைந்துள்ளார்.

'கண்டி யாத்திரை' என்ற சரித்திரம் வாய்ந்த சம்பவத்தால் இத் திட்டத்திற்கு நேர்ந்த கதியும் அதைத் தொடர்ந்த பல பயங்கர சம்பவங்களும் இலங்கை மக்கள் மனதில் பசுமரத்தாணி போல் இருக்குமன்றோ!

இந்த ஒப்பந்தம் சமஷ்டி முறைக்கும் அப்பால் மாநில சுயாட்சிக்கும் வித்திட்டுள்ளது என்

பார்க்க எத்தனையோ மடங்கு தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பரந்த

**ச. ஞானமூர்த்தி**

அளவில், மேலான அம்சங்களை உடையதாகுமென்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத தொன்றாகும். இதற்குச் சிகரம் வைத்தாற் போன்று, சான்றாக, அமைச்சர் குழாமைச்

யிருந்தாரோ. அவர் சரித்திரத்தில் என்றும் நிகழாத பாரதூரமான விளைவுகளுக்கும் பேரழிவுகளுக்கும் காரண கர்த்தா ஆவார்'— இதுவே அவர் பேசியது.

### முன்னுக்குப் பின் முரண்

இதே பாணியில் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் திரு அநுரா பண்டாரநாயக்கா, தனது தந்தை முப்பது வருடங்களுக்கு முன்பு

> கட்டுரையாளர் திரு ச. ஞானமூர்த்தி முன்னர் அரசியலில் முழுமூச்சாக உழைத்தவர். தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகுவதற்கு காரணகர்த்தாக்களில் ஒருவராக விளங்கியவர். வல்வை நகரசபைத் தலைவராகவும் பணிபுரிந்தவர்.
>
> இப்போதைய அரசியல் நிலைமையை இங்கு அனுபவ ரீதியாக ஆராய்கிறார்.
>
> கட்டுரையாளரின் சொந்தக் கருத்து 'சஞ்சீவி'யின் கருத்து என்று கொள்ளப்படலாகாது.
>
> - பிரதம ஆசிரியர்

கலாமென பெருமிதத்துடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால் அதே நேரத்தில் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிக்கும் இவர் ஜனாதிபதியின் உத்தேச மாகாணசபைத் திட்

(7ஆம் பக்கம் பார்க்க)

# அலை பாயும் மனதை நிலை ஆக்குதல் அவசியம்

ஒரு மனிதன் சந்தோஷப்படுவதற்கும், துன்பப்படுவதற்கும் காரணம் அவரவரின் மனமேயாகும். பயங்கரமான அணு ஆயுதங்களின் விளைவை விட மேலான பேராபத்தை விளைவிக்கக்கூடியது எண்ணங்கள் ஆகும். மனத்தில் எழும் எண்ணங்கள் அளவிட முடியாத அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளன. அர்ச்சுனன் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரைப் பார்த்து கேட்கிறான் "கிருஷ்ண குலத்தோய், இப்புருஷன் இச்சிக்காதிருந்தும் பலாத்தமாய் ஏவப்பட்டவனாய் எதனால் தள்ளுண்டு பாபம் செய்கிறான்." ஒரு கிறிஸ்தவ சிட்டர் தனக்கு ஒவ்வாதது என அறிந்தும் செயல் புரிகிறார். "எது சரியென அறிவால் அறிந்தும் செய்ய முடியாமல் தவிக்கிறான்" என்கிறார் மஹ பாரதத்தில்

துரியோதனனுக்கும் இத்தகைய மனப்பான்மை இருந்ததை தானே ஒப்புக்கொள்கின்றான்: "எது தர்மம் என்று தெரிந்தும் அதை ஆற்ற முடியவில்லை. எது அதர்மம் என்று அறிந்தும் அதை யான் தவிர்க்க முடியவில்லை" என்றான் துரியோதனன்.

மனத்தின் தன்மையையும் அதனை அடக்கும்

யும் தன்மையது; இகைக்கச் செய்வது; வலிவுடையது; திடமுடையது; அதை அடக்குவது காற்றை அடக்குவது போன்றது — இயலாதது என்று நினைக்கிறேன்" ஸ்ரீ பகவான் கலங்கும் மனத்தையுடைய அருச்சுனனைப் பார்த்து தடந்தோளாய்! மனம் கட்டுப்படாதது, அலையும் தன்மையது என்பதில்

**சுவாமி சித்ருபானந்தா**

முறையையும் ஸ்ரீமத் பகவத் கீதையில் 6ம் அத்தியாயத்தில் மூன்று சுலோகத்தில் காணலாம்.

"மது சூதனா, சமமாகப் பார்த்தல் என்ற தாம் புகட்டிய இந்த யோகமானது உறுதியாக நிலைத்திருக்குமென்று அலைகிற என் மனத்திற்குத் தோன்றவில்லை. கிருஷ்ணா! மனம் அலை

ஐயமில்லை எனினும் குந்தியின் மைந்தா, அப்பியாசத்தாலும் வைராக்கியத்தாலும் அதை அடக்கலாம்.

அப்பியாசம் என்பது பழக்கம். பழக்கத்தால் ஒவ்வொருவரும் தங்களைத் திருத்தியமைத்துக் கொள்ளலாம். அவரவர் பெற்றுள்ள பான்மை பழக்கத்தைப் பொறுத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# காந்திஜியைக் கவர்ந்த கானக்குயில் எம். எஸ்.; அதே கீதத்தைக் கேட்டுத் தானும் மயங்கினர்

"கானகத்திலே வரும் கீதம்,
கண்கள் பனித்திடப் பொங்கும் கீதம்,
கல்லும் கனியும் கீதம்,
பட்ட மரங்கள் தளிர்க்கும் கீதம்
பண்ணொலி கொஞ்சிடும் கீதம்,
காட்டு விலங்கும் கேட்டே மயங்கும்
மதுர மோகன கீதம்"- இப்படி இனிமையாக ஒரு 'குயில்' பாடியது.

எழுபத்தொன்பதாவது வயதை எட்டும் தருணத்தில் காந்திஜியின் மனதில் ஆசை பத்தாண்டிற்று. இந்த குயில்

"அந்தக் குயில், மீரா பஜனை பாட, நான் 79 ஆவது பிறந்த தினம் அன்று கேட்க வேண்டும்"—இப்படி காந்திஜி, சுசித்ரா கிருபளானியிடம் 31-9-1947 அன்று தெரிவித்தார்.

சுசித்ரா கிருபளானி காந்திஜியின் ஆசையை தொலைபேசி மூலம் சென்னைக்கு 1-10-1947 இல் தெரிவித்தார்.

"எனக்கு ஹிந்தி தெரியாதே. நான் எப்படி மீரா பஜனில் வரும் 'ஹரி தும ஹரோவை' பாடி அனுப்புவது"— இப்படி 'குயில்' புதுடில்லிக்குத் தகவல் அனுப்பியது.

அன்று மாலையே புதுடில்லியில் இருந்து சென்னைக்கு காந்



காந்திஜி

திஜியின் வேண்டுகோள் வந்தது.

"பாபு ஹரி தும ஹரோ பஜனை 'குயில்' பாடிக் கேட்க ஆசைப்படுகிறார். வேறு யார் பாடியதைக்கேட்பதிலும் பார்க்க அந்த 'குயில்' பாடாவிட்டாலும் வசனமாகப் பேசினாலும் போதும்; அதைக் கேட்கவே பாபு ஆசைப்படுகின்றார்" — புதுடில்லியில் இருந்து வந்த இரண்டாவது செய்தி கூறியது.

## ஜெய்ப்பூர் மகாராணாவும் அவர் பாடலில் கிறங்கியவரே

ஒன்றுமே செய்யமுடியாத நிலையில் 'குயில்' அகப்பட்டுக் கொண்டது.

அன்று நள்ளிரவாயிற்று. சென்னையில் உள்ள இந்திய வானொலி நிலைய ஸ்டுடியோவுக்குக் 'குயில்' சென்றது.

ஹிந்தி மொழியிலான 'ஹரி தும ஹரோ' பஜனை நன்றாக பயிற்சி செய்த பின்னர் ஸ்டுடியோவில் பதிவு செய்தது.

2. 10. 1947 பிறந்தது. புதுடில்லி செல்லும் முதலாவது விமானத்தில் பதிவு செய்யப்பட்ட மீரா பஜன் அனுப்பி வைக்கப்பட்டது.

அன்று மாலை பிறந்த தினப் பிரார்த்தனையின் போது 'குயில்' பாடிய மீரா பஜனைக் கேட்டு கிறங்கிப் போனார் காந்திஜி.

மகாத்மாவையே மயக்கிய அந்தக் 'குயில்' தான் இவ்வாரம் 70 ஆவது வயதில் காலடி எடுத்து வைக்கும் இசைப்

> காந்திஜியின் 117 ஆவது பிறந்த தினம் எதிர்வரும் அக்டோபர் 2 ஆம் திகதி வருகிறது.
>
> அவர் உயிருடன் இருந்த சமயம் 79 ஆவது பிறந்த தினத்தை இறுதியாகக் கொண்டாடினார்.
>
> அன்று அவர் வாழ்க்கையில் இடம்பெற்ற ஒரு சம்பவம் சென்ற 16 ஆம் திகதி 70ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய இசைக்குயில் எம். எஸ் சுப்புலட்சுமியின் வாழ்விலே மறக்க முடியாத நிகழ்ச்சியாகி விட்டது.
>
> இசையும் ஆத்மீகமும் ஒன்று சேர்ந்த அந் நிகழ்ச்சியை விவரிக்கிறது இக் கட்டுரை.

பேரறிஞர் எம் எஸ். சுப்புலட்சுமி அவர்கள்.

### 4 மாதங்களின் பின்னர் அவலச் செய்தி

பாபுஜியின் அருட்பார்வைக்கு இலக்காகி சரியாக நான்கு மாதங்கள் சென்ற பின்னர், ஒரு நாள் 30.1.1948 மாலை சென்னை வீட்டில்

**பிரசாந்தி**

குடும்பத்துடன் வானொலியைக் கேட்டுக் கொண்டிருந்தார் சுப்புலட்சுமி.

மாலை 5. 30 மணியளவில் வானொலியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த நிகழ்ச்சி திடீரென்று நிறுத்தப்பட்டது.

ஒரு நிமிட மௌனம். அடுத்த கணம் உலகமே இடிந்து விழுந்தது போன்ற செய்தி ஒலிபரப்பப்பட்டது.

காந்திஜி சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது தான் அச்செய்தி.

செய்தி கேட்டே கலங்கிவிட்ட சுப்புலட்சுமி செய்தியின் பின்னர் வந்த பாடலைக் கேட்டு மயக்கம் போட்டு விழுந்து விட்டார்.

காந்திஜியின் கடைசிப் பிறந்ததினத்தன்று, தான் பாடி அனுப்பிய 'ஹரி தும ஹரோ' மீரா பஜன் தான் செய்தியின் பின்னர் ஒலிபரப்பானது. காந்திஜியை மயக்கிய



எம். எஸ். சுப்புலட்சுமி

பாடலைக் கேட்டே, பாடியவர் மயக்கம் போட்டு விழுந்த அனுபவம் சுப்புலட்சுமிக்குக் கிடைத்தது.

### பாபுஜியை சிரிக்க வைத்தவர்

வாழ்க்கையிலேயே மறக்க முடியாத இந்த அனுபவத்தைப் பெற்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கடல் கடந்த கடிதம்

### யானைக்கும் அடி சறுக்குமா?

தம்பி,

"திருக்குறளையும் அறநூல்களையும் கட்டியழுதுகொண்டிருக்கிறீர்களே! வேறு வேலையில்லையா?" எனக் கேலி செய்து எழுதிய கடிதம் கிடைத்தது. காலக்குகை (Time Tunnel) என்ற கற்பனைத் தொடரை, தம்பி, ரூபவாஹினியிற் கண்டு களித்திருப்பாய்!

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த வள்ளுவர் அந்தக் காலக்குகையூடாக வந்து தற்போதைய சம்பவங்களை வீடியோப் படம் எடுத்துப் பல கசெட்டுகளாக்கி வைத்திருப்பது உனக்குத் தெரியுமா? ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறே பதம்! இதோ ஒரு கசெட்!

"பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் தாக்குறின்" — (குறள் 599)

(பரியது - பெரிய உடம்புள்ளது; கூர்ங்கோட்டது - கூரிய சொம்புகளை உடையது; வெரூஉம் - அஞ்சும்)

மிருகங்களிற் பெரியது யானை! பெரும்பான்மை - பல முகாம்கள் - புதிய ஆட்சேர்ப்பு- வெளியிடத்துப் பயிற்சி - வெளிநாட்டு ஆலோசனைகள்!

யானைக்கு இரட்டைக் கொம்புகள்! நீயும் பார்த்திருப்பாயே தம்பி, சில விசேட வாகனங்களிற் சோடியாயிருப்பதை! யானையின் கொம்புகள் எங்கிருந்தோவெல்லாம் வருகின்றன; புதுப் புது வகையாக; பெருந்தொகையாக!

இருந்துமென்ன? ஆனை அஞ்சுகிறதாம் அந்த மிருகம் தாக்கினால்! அந்தப் பிராணி சிறியது; கொம்புகள் இல்லை ஊக்கமும் நோக்கமும் தான் அதன் வலிமை!

தற்கால ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி சின்னங்களை வள்ளுவர் எப்படித்தான் அறிந்தாரோ? முக்காலம் உணர்ந்த முனிவர் என்பதை, தம்பி, நீ இப்போது மறுக்கிறாயா? ஒரு கசெட்டை விசேட டெக் மூலம் காட்டினேன்; படம் முழுதும் தெளிவாகத் தெரிகிறதா?

அன்புடன்
—சிவா—

# நல்லூர்ப் படை போர் முழக்கம்! பறங்கிப்படை வெடி முழக்கம்!!

அன்று -

கீழ்த்திசையில் சூரியன் மெல்ல மெல்ல உதயமாகிக் கொண்டிருக்கிறான். பொழுது புலர்ந்து கொண்டிருக்கிறது.

பண்ணைக் காட்டில் பறங்கியர் அணியணியாக ஆயுதபாணிகளாக நிற்கின்றனர். நயவஞ்சகமாக நடித்து நாடு பிடிக்க வந்தவர்கள் தம் போர்வையை அகற்றி விட்டு போர்வாளேந்தி நிற்கின்றனர். வியாபாரமென்று கடை விரிக்க வந்தவர்கள் தம் சுயரூபம் கொண்டு படை கூட்டி நிற்கின்றனர். மண்கோட்டை கட்டி நமித்திடம் தீட்டியோர் மனக்கோட்டை கட்டி போர்வெல்ல நிற்கின்றனர்.

அன்று சங்கிலி மன்னனை அரண்மனையில் சந்திக்க வைரம், மரகதம், பதுமராகம், புஷ்பராகமென வெகுமதிகள் ஏந்திச் சென்று தாள் பணிந்த வெள்ளைப் பறங்கியர், இன்று அதே மன்னனை செருமுனையில் சந்திக்க, வாளேந்தி துவக்கேந்தி, துணிவு பெற்று நிற்கின்றனர்.

இது காலத்தின் கோலமா அல்லது......

வியாபாரம் செய்ய வென்று முதன் முதலில் பண்ணைத்துறையில் வந்திறங்கிய பறங்கியர் முழுக்க முழுக்க வியாபாரிகளல்லர் வியாபாரமென்ற முகமுடியுடன் வந்திறங்கிய போர்ப் பயிற்சி பெற்ற பறங்கிப் படையினர்தான் அவர்கள்! அதை சங்கிலி மன்னன் முன்னரே கொஞ்சம் மோப்பம் பிடித்திருந்தான். அதனாலேயே அவர்களுக்கு அனுமதி மறுத்து நின்றான்.

### உள்வீட்டு எதிரிகள்

ஆனால்......

பறங்கியரையும் அவர் தம் தீயநோக்கங்களையும் தூரதிருஷ்டியுடன் முன்கூட்டியே அறிந்திருந்த

சிய உறவுகளையும் மன்னனால் உணர முடியாமல் போயிற்று. அது மன்னனின் கூர்மதியிற் குற்றமன்று மன்னன் கொண்டிருந்த வஞ்சகமில்லா நெஞ்சம் தான் அதற்கான காரணம். நல்லூர் கோட்டைக்குள் துரோகிகள் இருப்பார்களென்பதை மன்னனால் கற்பனை பண்ணிப் பார்க்க முடியுமா? தன்மானம் மிக்க பொன்னனை நாட்டினை பறங்கியரிடம் காட்டிக்

### அரண்மனைச் சேனையும் அந்நியனின் சேனையும் போர் முனையில் சந்திப்பு

மன்னனால் தன் பக்கத்திலிருந்த ஒரு சிலரின் கபட எண்ணங்களை மட்டும் அறிய முடியாமல் போய்விட்டது பண்ணைக்காட்டு மண்கோட்டைக்குள் எவ்வாறு எதிரிகள் பதுங்கியிருந்தார்களோ அதே போன்று நல்லூர் கோட்டைக்குள் பதுங்கி வாழ்ந்த சதிகாரரை மன்னனால் இனம் காண முடியவில்லை. எதிரிகளுக்கும் சதிகாரர்களுக்கும் இடையேயிருந்த இரக

கொடுத்து சன்மானம் பெறத் துடித்த அவமானச் சின்னங்கள் அரண்மனைக்குள் நடமாடுவதை மன்னன் நினைத்தும் பார்க்கவில்லை எல்லோர் மீதும் மன்னன் கொண்டிருந்த மாசு மறுவற்ற நம்பிக்கைதான் அதற்குக் காரணமாகும் இல்லாவிட்டால்.....

சூரியோதயம் ஆகிவிட்டது......நல்லூர் இராஜதானியில் பரபரப்பு நிலவுகிறது. பண்ணைக்காட்டு மண்கோட்டையின் முன்

அணிவகுத்து நின்ற பறங்கிப் படையினர், படைத்தளபதி அன்ரூபூர்த்தாட் தலைமையில் போர்க்களம் நோக்கிச்சென்று கொண்டிருக்கின்றனர் (நல்லூர் வீரமாகாளியம்மன் கோவிலுக்கு அருகாமையில் அமைந்திருந்த பெரும் திடல்தான் அன்றைய போர்க்களமாகும் இன்று அப் பெருந்திடல் வீடுகளாலும் பனை மரங்களாலும் நிரப்பப்பட்டுள்ளது)

### புறப்பட்டான் சங்கிலியன்

நல்லூர் அரண்மனைப் புறக்கோட்டையில் போர் முரசு ஒலிக்கிறது. சேனை வீரர்கள் அணி அணியாய் திரள்கின்றனர் அரண்மனையிலிருந்து யுத்த சன்னத்தனாய் சங்கிலி மன்னன் புறப்படுகிறான். அவனது இடுப்புப் பட்டியில் குத்து வாளும் போர் வாளும் தொங்குகின்றன. மன்னனை அவனது அன்புத்

துணைவியாம் நல்லூர் இராணி பெரியநாச்சியார் ஆராத்தியெடுத்து குங்குமத் திலகமிட்டு 'சென்று வருக வேந்தே! வென்று வருக" என வாழ்த்தியனுப்புகிறாள். வீரப்புன்னகை உதிர்த்த சேனைமணி மார்பினனும் சங்கிலி மன்னன் அவ்விடமிருந்து விறுக்கெனப் படிகளிறங்கி ஓரே தாவில் பாய்ந்து தன் வெண்புரவி மீது ஏறிக் கொள்கிறான்.

மன்னன் தன்மீது தாவி அமர்ந்ததும் குதிரையும் மன்னனை வாழ்த்துவது போன்று தன் முன்னங்கால்களைத் தூக்கியெழுந்து கனைத்துவிட்டு நிற்கிறது பின் ஒரு கணம் பெரியநாச்சியார் மன்னனை அன்புடன் நோக்க புரவியின் கடிவாளத்தை இடக்கரம் மாற்றிய மன்னன் வலக்கரம் உயர்த்தியசைத்து "சென்று வருகிறேன்" என இயம்பி விடை

பெறுகிறான்.

பேரிகை முழங்க பேரிகை ஒலிக்க, நாற்றிசை போற்றும் நல்லூர் சைன்யம் நந்திக்கொடி ஏந்திய குதிரைவீரன் முன்னே செல்ல போர்க்களம் நோக்கிப் புறப்படுகிறது. மல்லாரும் புயம் கொண்ட சேனைத் தளபதி வீரமாணிக்க தேவனும், விரிதோள் வீரன் துணைத் தளபதி கரைப்பிட்டி வன்னியனும் புடைசூழ யாழ்ப்பாண

### ம. க. அ. அந்தனிசில்

இராசிய மன்னன் இராஜாதி ராஜ ராஜ கம்பீர ராஜ மார்த்தாண்ட வீரகுலசேகர செகராஜசேகரம் (சங்கிலி சிங்க ஏறு போல் செருமுனை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறான்.

வீரமாகாளியம்மன் கோவில் நெருங்கியதும் தன் புரவியிலிருந்து இறங்கிய மன்னன் அம்பாள் தரிசனம் செய்ய கோவிலுள் நுழையவும் சேனையினர் மெதுவாக செருக்களம் நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றனர்.

கோவில்மணி ஒலித்துக் கொண்டிருக்கிறது. கோவிலில் நுழைந்த சங்கிலி மன்னன் இரு கரம் கூப்பி அம்பாளை மனமுருக நோக்கி "அம்மா வீரத்தாயே! செருக்களத்தில் விரோதிகளைச் சந்திக்குமுன் நின் சந்நிதானம் தேடி வந்தேன். எமக்கு வெற்றி கிட்ட அருள்மொழி பகர்வாய் தாயே. நின்பாதம் போற்றி போற்றி" என வணங்கிவிட்டு மீண்டும் தன் புரவியேறி செருமுனை விரைகின்றான்.

போர்முரசு கொட்டியவாறு நல்லூர் சைன்யம் போர்க்களம் புகுந்து கொள்கிறது. அங்கே பறங்கியர் படையைக் காணோம். "பந்திக்குப்பிந்தினாலும் சண்டைக்கு முந்து" எனும் தமிழ் முதுமொழிக்கொப்ப போர்க்களத்து'கு தாம் முந்தி வந்துவிட்டதையெண்ணி சங்கிலி மன்னன் பெருமிதம் கொள்கிறான். சேனைத் தளபதி வீரமாணிக்க தேவன் வாட்சேனை ஈட்டிச்சேனை போன்ற அணிகளை வரிசை வரிசையாய் நிறுத்தி ஆயத்தம் செய்கிறான். துணைத்தளபதி கரைப்பிட்டி வன்னியன் தன் புரவிமீது போர்க்களத்தை ஓர் முறை சுற்றி வந்து நோட்டம் விடுகிறான்......

இன்னும் பறங்கியர் படை வந்து சேர்வதாயில்லை. நேரம் செல்லச் செல்ல சங்கிலி மன்னனுக்குச் சினமேறிக் கொண்டிருக்கிறது.

அப்போது......

தூரத்தே ஒருவன் குதிரை மீது வேகமாக வருவதைக்கண்ட துணைத் தளபதி, குதிரையில் வருபவன் அரண்மனை ஒற்றன் என்பதை இனங்கண்டு அவனை நோக்கித் தன் புரவியைச் செலுத்துகிறான் ஒற்றன் சொன்ன சேதியறிந்து வந்த துணைத் தளபதி மன்னனை நோக்கி "மன்னவா பறங்கியர் படை நெருங்கி வந்துகொண்டிருக்கிறது' எனக் கூறுகிறான். அது கேட்டு சிங்கமெனச் சிலிர்த்த சங்கிலி மன்னன்" "வரட்டும் வரட்டும்" என கர்ஜிக்கிறான் நல்லூர் சைன்யத்தின் இசைப்பிரிவினர் உச்சத்தொனியில் போர் முழக்கம் ஒலிக்கின்றனர் பறங்கிப் படை போர்க்களம் வந்து சேர்ந்ததும் பாயும் வேங்கைகள் போல் ஓரே தாவில் பாய்ந்து அவர்களைச் சங்கரிக்க வேண்டுமென நல்லூர்ச்சேனை எண்ணிக் காத்து நிற்கிறது. வாட்சேனையினர் உறையிலிருந்து தம்வாள்களை உருவிக் கொள்கின்றனர் அவ்வமயம் சற்றுத் தூரத்தே வெடி முழக்கம் ஒலித்து எதிரொலிக்கிறது ......

மீண்டும் வெடிமுழக்கம்.

(வளரும்)

> பறங்கியரின் சூழ்ச்சியும் மண்கோட்டையுடன் படைகொண்டு மோதிய நல்லூர் அரசு
>
> (ஆறு - அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயும் தந்தையும் தரணியில் தெய்வம்

ஓர் ஊரில் ஒரு பெரிய பணக்காரன் இருந்தான் அவனுக்கு ஒரு தாயும் ஒரு தந்தையும் இருந்தார்கள். இப்பெற்றோர் இவன் சிறுவனாக இருக்கும்போதே அவனை நன்றாக வளர்த்து தற்பொழுது ஒரு பெரிய செல்வந்தனாக இருக்க அன்று அவர்கள் வழி அமைத்தார்கள்.

பின் அவனே மணம் முடித்து பிள்ளைகள் பெற்றான் அவனது மூத்த மகன் தனது அப்பாவின் பெற்றோரில் பெரியதோர் அக்கறையும், அன்பும், பாசமும் கொண்டவனாக இருந்தான்.

நாளா வட்டத்தில் காலச்சக்கரம் உருண்டோடிக்கொண்டிருந்தது. அப்பணக்காரன் தன் பெற்றோருக்கு ஓட்டுச் சட்டியில்தான் கஞ்சி வடித்து உண்ணக் கொடுத்தான்.

இதையெல்லாம் அவனின் மகன் பார்த்துப் பார்த்துக் கவலைப்பட்டான். ஒரு நாள் அவன் ஓட்டுச்சட்டியை எடுத்து ஒளித்துவிட்டான் அப்போது அவனின் தகப்பன் தன்பெற்றோரிடம் சென்று "ஓட்டுச் சட்டியை ஏன் துலைத்தாய்? இப்போது எதில் கஞ்சி வார்ப்பது?' என்று மாரித் தவளையைப்போல் கத்தினான். அப்போது அவனின் மகன் வந்து 'அப்பா! அப்பா! ஓட்டுச்சட்டியை நான் தான் வைத்துள்ளேன் என்றான். தகப்பன், 'ஏன் எடுத்தாய்?' என்று கேட்ட போது அவன் கூறினான்;

இப்படி ஒரு சட்டி மட்டுந்தான் உண்டு. தற்செயலாக உடைந்துவிட்டாலும் பின் உங்களுக்குக் கஞ்சி ஊத்துவதற்கு எதை எடுப்பேன் என்ற கேள்விக்கு விடை காணவே அவ்வாறு செய்தேன்' என்றான்.


அப்போது அவன் தகப்பன் மனமாறி, நிலை மாறி தன் பெற்றோருக்கு நல்ல மதிப்புக் கொடுத்தான். எமக்கும் சிறுபிள்ளைகள் இருக்கிறார்கள் அவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களைப் பழக்க வேண்டும் இது பெற்றோரின் கடமை.' தந்தை தாய் பேண்' என்பதை மனத்திற்கொண்டு ஒவ்வொருவரும் ஒழுகினால் உலகம் திருந்திவிடும்.

வ விஜிதேவி
(புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மன்னார்).

## தெரியுமா உங்களுக்கு?

- உலகில் முதன் முதல் கொடி பற்றிய செய்திகளை வெளியிட்டவர் சீனர்.
- ஆசியாவிலே மிகப் பெரிய ரயில்வேபாதை இந்தியாவில்தான் உண்டு
- செஞ்சிலுவைச் சங்கம் 1945ல் சுவீஸ் நாட்டவரான ஹென்றி டூரன்ட் என்பவரால ஆரம்பிக்கப்பட்டது.

தி தவபாலன்




## உலகிலேயே மிகப் பெரிய கலங்கரை விளக்கம்

கலங்கரை விளக்கங்கள் மாலுமிகளுக்கும் கடற்தொழில் புரிவோருக்கும் அரியபணியைப் புரிந்து வருவது உங்களுக்குத் தெரிந்ததே. ஆனால் உலகிலேயே மிகப்பெரிய கலங்கரை விளக்கம் எங்குள்ளது தெரியுமா? இங்கிலாந்து தேசத்தில் உள்ள கலங்கரை விளக்கமே உலகின் மிகப்பெரிய கலங்கரை விளக்கமாகும்.

கடலின் கரையில் இருந்து 18 மைல்கள் கடலுக்குள் அமைந்துள்ள இக்கோபுரத்தின் நீருக்கு மேல் உள்ள பகுதி மாத்திரம் 115அடி உயரமானது. சுமார் 48 மைல்கள் தூரத்திலேயே தெரியக்கூடிய இதன் வெளிச்சம் இருபத்தைந்து இலட்சம் திரி வலு (Candle Power) உடையதாகும்.

இந்த வெளிச்ச வீட்டின் மொத்த நிறை 5625 தொன்கள் ஆகும். இதன் மேல்பகுதியில் 'ஹெலிக்கொப்டர்' வந்து இறங்குவதற்குரிய வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆங்கில கால்வாய்க்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள இந்த கலங்கரை விளக்கத்தினை நிர்மாணிப்பதற்கு 5 இலட்சம் பவுண்கள் செலவாகி உள்ளன

உலகிலேயே அதிக சக்தியுடையதும் பெரியதுமான இக்கலங்கரை விளக்கத்தினை நிர்மாணிப்பதற்கு 16 மாதங்கள் எடுத்தன

—சபா. புஷ்பஜனனி— சுன்னகம்.

## கவிதைப் புதிர்

விலங்கு வகையில் நீரருந்தா
விலங்கின் பெயரை நீ அறிந்திட்டால்
கலக்கம் ஏதும் இன்றியென்றன்
காது கேட்கக் கூறிடுவாய்

மண்ணில் வாழும் விலங்கினுள்ளே
மந்தமான நளி சோம்பல்
கொண்ட விலங்கின் பெயர் தெரிந்தால்
குறிப்பாக எனக்குக் கூறிடுவாய்

அதிகத் தொலைவு பறந்து செல்லும்
ஆற்றல் கொண்ட பறவையின்பேர்
அதிகம் நேரம் கடத்தாமல்
அறிவிப்பாய் நீ என்றனுக்கே

புலவர் செய்த செய்யுளுள்ளே
புவியில் ஒன்று மிகப்பெரிதாய்
உலவி வருவ தோடன்றி
உயர்ந்தும் காணும் அது யாது?

1. சோவா 2. சுலொத் 3. ஆர்ட்டிக்டென் 4. மகாபாரதம்

தொகுப்பு: எம் எம் -அபூபக்கர் மன்னார்.

## சீதனத்தின் சீர்கேட்டை சீர்திருத்த யார் வருவார்?

சீதனக் கொடுமையினால் சீரழியும் இச்சமுதாயம்
நூதனக் கண்கொண்டு பார்க்குதடா வெளியுலகை
ஆதனம் இல்லையென்றால் அழகில்லை என்றிடுவார்
வேதனத்தின் விழுக்காடு வையகத்தார்
விளங்காரோ

பணமுதலை தினம் அலையும் வலைவிரித்து
குணம் கெட்ட குரங்கினமோ அதில் சிக்கும்
முகம் சிரித்து
சினம் கொண்ட சிறுத்தையிடம் சிறைப்பட்டு
தினம் வாடும் தன்தரம் கெட்ட வாழ்வை
நொந்து
தனம் கண்டு குணம் மாறும் பச்சோந்தி
வனம் சென்று வாழ்வதுதான் மனச்சாந்தி

நாகரிகம் வளர்ந்திட்ட இந்நாளில்......!
காதலிக்கும் பெண்ணொருத்தி கைப்பிடிக்கும்
காரிகையோ வேறொருத்தி
இப்படியே சிறுகதைகள் தொடர்கதையாய்
கழியுமானால்
பண்பாட்டின் சீர்கேட்டைப் பழியாரோ
கூடிநின்று!

கூட்டாகப் பழகிவிட்ட இரு உள்ளம்......!
நோட்டாக எண்ணிவிட்டால் கிழித்திடுவோம்
சிட்டென்பார்
மனத்தாலே நினைந்தவளை மறந்து விட்டு
மறுதாரப் பேச்செடுத்தால் முகம் சிரிக்கும்
குணம் கெட்ட விலங்கினத்தின் செய்கையினால்
முகம் சுளித்து மனம் சலித்து ஒதுங்குதடா
மனித இனம்
அகம் கெட்டுத் தினம் அலையும் அரக்கர்களால்
நிறைகுன்றி நிலைதளர்ந்த அபலைகளோ அனந்தம்
இங்கு

குறையாத செல்வத்தால் குறைபாட்டை
மூடிவைத்து
பறையாது இருந்திடுவார் பணக்கார சீமான்கள்
முறை தவறிக் கறையேற்ற கன்னியரோ
உறைவிடத்தை விட்டோடி உயிர் மாய்த்துக்
கொள்வதற்கே
முடிவெடுத்துப் பழி சுமப்பாள் பாவி அவள்
பாட்டாளி பணக்காரன் வேற்றுமைகள் தளரும்
காலம்
வேற்றுமையை ஏற்படுத்த முனைகின்றார் ஒருசாரார்
ஒற்றுமையை ஏற்படுத்த முனைகின்ற ஒரு சிலரும்
கற்றவரின் தத்துவத்தைக் கற்றுணர்ந்த
மற்றவரும்
ஊருக்கே நற்கருணை உபதேசம் புரிகின்றார்
பேர் எடுக்கச் செயல் புரியும் பெருமனிதர்
யார் இங்கு தம்வாழ்வில் சீர்திருத்தம்
மேற்கொண்டார்
உண்மை நிலை இது என்று தெரிந்த பின்பும்
சீதனத்தின் சீர்கேட்டைச் சீர்திருத்த யார்
வருவார்?

- வி. எஸ். செல்வராஜா

## கலாசாரம் காத்து கட்டுப்பாடுகளைக் களைவது பெண் விடுதலைக்கு முக்கியம்

கீழைத்தேய நாடுகளில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்றாலும் கூட பாரம்பரிய கட்டுப்பாடுகள் சமுதாய அமைப்பு முறை என்கின்ற போர்வையில் பெண்கள் மீதான ஒடுக்குமுறை இப்பகுதிகளில்தான் அதிகமாக நிலவி வந்துள்ளது என்பதுவும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய அம்சமாகும். இங்கு நடைபெற்றுவரும் போராட்டங்களில் பெண்களும் குறிப்பிடக்கூடிய வகையில் பங்கு பற்றியுள்ளார்கள் - பங்கு பற்றுகிறார்கள் என்பதுவும் மறுக்கப்படமுடியாத உண்மை.

எமது சமுதாய அமைப்பில் பெண்களுக்கு விதிக்கப்பட்டுள்ள சில பாரம்பரிய கட்டுப்பாடுகள் மூடத்தனமானவையாயும், பிற்போக்குத்தனமானவையாயும் காணப்படுகிறது பெண் விடுதலையையிட்டுப் போராடும் நாங்கள் அவற்றைக் களைந்தெறிய வேண்டியது கட்டாயமானது ஆகும். அதற்காக எமது கலாசார முறைகள் முழுவதையும் தூக்கி யெறிந்து விட்டுப் பெண் விடுதலைக்காகப் போராடப் புறப்பட்டிருக்கிறோம் என்றால் அதில் எந்தவித அர்த்தமும் இல்லை. போராட்டம் ஆரம்பிக்கும் நாம் முதலில் எதிரியிடமிருந்து எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ளும் திறமையுடையவர்களாயிருத்தல் வேண்டும் எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ளுதல் என்னும்போது எமது மூதாதையரால் பெண்களுக்கு என்று விதிக்கப்பட்டுள்ள சில கட்டுப்பாடுகள் தேவையான தொன்றாகும். எமது பாதுகாப்பிற்காக அவற்றைக் களைந்தெறிய முடியாத நிர்ப்பந்தத்திற்குள்ளாகலாம் எனவே போராட்டம் என்கின்ற போர்வையில் எமது கலாசாரம் அழிந்து போவதையும், எம்மால் அனுமதிக்க முடியாது


பெண்களது சமத்துவம், உரிமைகள் பற்றி பெண்களிடையே நிலவும் கருத்துக்களைவிடத் தெளிவான கருத்துகளைக் கொண்ட பல ஆண்களை எமது சமுதாயத்தில் காணமுடிகிறது. சில சமயங்களில் பெண் விடுதலையில் அவர்கள் கொண்டுள்ள தெளிவான கருத்துகள் பெண்களாகிய எம்மையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளன.

பெண்களுக்கென்ற தனியான அமைப்புகளூடாகத் தான் பெண் விடுதலைக்காகப் போராட முடியும் என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது. எமது உரிமைப் போராட்டம் தீவிரமாக வளர்ச்சியடைந்துள்ள இன்றைய கால கட்டத்தில் இயங்கும் அமைப்புகள் ஒன்று சேர்வதை மக்கள் ஆதரிப்பார்களேயொழிய புதியதாக ஓர் தனியான அமைப்பை உருவாக்குவதை மக்கள் விரும்ப மாட்டார்கள். எனவே இயங்கும் மகளிர் அமைப்புக் குழுக்கள் பிற்போக்குத்தனமான கருத்துகளைக் களைந்து முற்போக்குச் சிந்தனையுடன் எமது உரிமைப்போராட்டத்தை முன்னெடுப்பதே எமது கடமையாகும்.

அவ்வாறு செயல்படும் பட்சத்தில் எமது விடுதலைப் போராட்ட [illegible] பொருளாதார விடுதலையும் [illegible] தொன்றாக மாற்றமடையும்.

'ஆரபி'




# சினிமாவுக்கு வருவேன் என்று கனவிலும் கூட நினைக்கவில்லை

## புதுமுகம் ரேகா கூறுகிறார்

"நான் சினிமாவில் நடிப்பேன் என்று கனவிலும் கூட நினைக்கவில்லை' அது ஓர் எதிர்பாராத சம்பவம்"

இப்படி கூறுகிறார் "கடலோரக் கவிதைகள்" புகழ் ரேகா.

அவர் இது பற்றி மேலும் கூறுகையில்,

அம்மாவும், நானும் ஊட்டிக்குச் சென்றிருந்தோம். அங்கே கதாசிரியரும் தயாரிப்பாளருமான கலைமணியை எதிர்பாராமல் சந்திக்க நேர்ந்தது.

அவ்வேளை "நடிக்க ஆசை இருந்தால், சென்னைக்கு வந்து என்னைச் சந்திக்கலாம்" என்று தனது முகவரியைக் கொடுத்து விட்டுச் சென்றார் கலைமணி.

இது பற்றி யோசித்து ஒரு முடிவுக்கு வந்தோம். சினிமாவில் நடிப்பது என்பதுதான் அந்த முடிவு. சென்னையில் கலைமணியைச் சந்தித்தோம்.

அந்த நேரத்தில் பாரதிராஜா தனது படத்திற்கு கதாநாயகி ஒருவரைத் தேடிக்கொண்டிருந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கலைமணி என்னை பாரதிராஜாவிடம் அறிமுகப்படுத்தினார்.

ஒருசில தேர்வுகளோடு நான் "ஓகே" ஆகிவிட்டேன்.

பாரதிராஜாவின் படத்திற்கு அடுத்ததாக பாலசந்தரின் "புன்னகை மன்னன்" படத்தில் நடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

இப்பொழுது "நம்ம ஊரு நல்ல ஊரு" "இது ஒரு தொடர்கதை" ஆகிய படங்களில் நடித்துக் கொண்டிருக்கின்றேன்" என்றார்.

## மோகனப்பிரியாவின் எதிர்பார்ப்பு இது தான்!

தமிழ் நடிகை மோகனப்பிரியா திரையுலகில் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இளம் நடிகை, "காதல் காதல் காதல்" தான் இவரின் முதல் படம்.

முறைப்படி பரத நாட்டியம் கற்றிருக்கும் இவரின் ஆசை — ஏதோ வந்தோம் போனோம் என்றில்லாமல் நடிப்புத் திறமையை முழுமையாக வெளிப்படுத்தக் கூடிய கனமான குணசித்திரப் பாத்திரங்கள் ஏற்று - மக்கள் மனதில் நல்லதொரு இடத்தைப் பிடிப்பதுதான்.

"ஓரளவுக்கு சில படங்களில் எனக்கு அத்தகைய கேரக்டர்கள் கிடைத்திருக்கின்றன. இனியும் கிடைக்கும் பட்சம் என் திறமையைக் காட்டி புகழ் பெறுவேன்" என்று சொல்கிறார் மோகனப் பிரியா.

## எம். ஜி. ஆரின் தியேட்டர் சாதனை

தமிழ் நாட்டில் எம். ஜி ஆர் ஆட்சிக்கு வந்த வேளையில் 1500 சினிமா தியேட்டர்களே இருந்தன

இப்பொழுது அங்கு 2,500 தியேட்டர்கள் உள்ளன.

அதுமட்டுமன்றி, 300 தியேட்டர்களின் நிர்மாண வேலைகள் நடைபெற்றுக் கொண்டும் இருக்கின்றன.

எம். ஜி ஆர். ஆட்சியின் சாதனைகளில் இதுவும் ஒன்று



## ராதிகாவின் 'மறக்க' முடியாத அந்த நண்பர் யார்?

ஒவ்வொருவருக்கும் மறக்க முடியாத நண்பர்கள் இருப்பார்கள். நடிகை ராதிகாவுக்கும் அப்படி ஒரு நண்பர்

யார் அந்த நண்பர்? அந்த நண்பர் ஆண் நண்பராக இருக்குமோ?

கேட்டால்— அவருக்கு அப்படி ஓர் ஆண் நண்பரும் இதுவரை இல்லை என்று மறுக்கிறார்.

வேறு யாராக இருக்கும் அந்த நண்பர் என்று யோசிக்கிறீர்களா?

ராதிகாவே சொல்கிறார்:

நான் சினிமாவுக்கு வந்தது முதல்—கிழக்கே போகும் ரயிலில் ஆரம்பித்து இன்றுவரை—ஒரு நாளைக்கு குறைந்தது பதினான்கு மணி நேரம் ஒட்டி உறவாடும் நண்பன் வேறுயாருமல்ல கேமராவேதான்.

கொழும்பில் ஹோலிஃபெமிலி கொன்வென்டில் படித்துவிட்டுச் சென்ற அவருக்கு இப்படியும் ஒரு நண்பரா?

## கிண்டல் பேர்வழிக்கு அமிதாப் கொடுத்த சூடான பதில்

உலகப் புகழ் பெற்ற இந்தி நடிகர் அமிதாப் பச்சன்.

ஒரு நாள் விமானப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

சக பயணி ஒருவர் நடிகரை அடையாளங் கண்டுவிட்டார்.

நடிகரைக் கிண்டல் பண்ணும் எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

அமிதாப்பைப் பார்த்து 'பழகிய முகம்போல் உள்ளது. நீங்கள் யசர்' -என்று கேட்டார்.

அமிதாப் பதிலளிக்க வில்லை.

சகபயணி மீண்டும் கிண்டல் கேள்விகளைத் தொடர்ந்தார்.

நீங்கள்தான் நடிகர் அமிதாப்பச்சனா? அது தானே உங்கள் பெயர்- இக்கேள்விக்குப் பின்னர் தான் அமிதாப் புரிந்து கொண்டார். சகபயணி கிண்டல் பேர்வழி என்று.

என் பெற்றோர்களைக் கேட்டு அது தானா பெயர் என்று பின்னர் சொல்கின்றேன்—

இப்படி அவர் பதில் சொன்ன பின்னர்தான், கிண்டல் பேர்வழியின் வாய் அடங்கியது.

## மீண்டும் ராஜா இசையமைக்கிறார்

பிரபல பின்னணிப் பாடகரும், இசையமைப்பாளருமான ஏ. எம். ராஜா நீண்ட இடைவெளிக்குப்பின், ஒரு படத்துக்கு இசையமைக்கிறார்

படத்தின் பெயர் 'இளமை இல்லம்.' டைரக்ஷன்: வி. எஸ் சிதம்பரம்.

வலம்புரிஜான் பாடல்களை எழுதுகிறார்.

## திரை உலகில்

தெலுங்கு நடிகர் நாகேஸ்வராவின் மகன் நடித்த ஒரு தெலுங்குப்படம் சமீபத்தில் சக்கை போடு போட்டிருக்கிறதாம்.

*

பணத்திற்கு அடிமையாகாத, சொந்தக் காலில் நிற்பவரைத்தான் நான் திருமணம் செய்துகொள்வேன் என்கிறாராம் ஜீவிதா.

*

மணிவண்ணனின் படத்தில் சிவகுமார் வயதான பாத்திரத்தில் சுதந்திரப் போராட்டத் தியாகியாக திறமையாக நடிக்கிறார். இதில் சிவகுமாரின் மகளாக நதியா நடிப்பார் எனத் தெரிகிறது.

## தேவிபாலாவும் இந்தியில்

இந்திப் படவுலகில் நடிகை தேவிபாலாவும் நுழைந்துவிட்டார்.

"நியாயம் கேட்கிறேன்", "தலையணை மந்திரம்" படங்களில் இவர் நடித்திருக்கிறார்.

## தயாரிப்பு: பேரின்பம்

## சிவகுமாரின் படம் 'மனிதனின் மறுபக்கம்'

'மனிதனின் மறுபக்கம்'. இது சிவகுமாரின் நூற்றி ஐம்பதாவது படம்.

இந்தப் படத்தை சத்ய ஜோதி பிலிம்ஸார் தயாரித்துள்ளார்கள்

சிவகுமாரின் ஜோடியாக ராதா நடிக்கிறார். இன்னும் ஒரு கேரக்டரில் ஜெயஸ்ரீ நடிக்கிறார்.

இந்தப் படத்தைப் பற்றி அதன் தயாரிப்பாளர் [illegible] கூறுகிறார்:

[illegible] கதாநாயகனை நடித்த மலையாளப் படத்தின் 'ரீமேக்' இது இதில் சிவகுமாரை நடிக்க வைக்க வேண்டும் என்று முடிவு செய்தோம். அவரிடம் கேட்டோம்.

மலையாளப் படத்தைப் பார்த்துவிட்டு அந்தக் கேரக்டரில் நடிக்கச் சம்மதம் தெரிவித்தார் சிவகுமார்.

அத்தோடு ஒரு வேண்டுகோளையும் விடுத்தார். தனது 150 ஆவது படமாக அது அமைய வேண்டும்— இதுதான் அந்த வேண்டுகோள். நாங்களும் பூரிப்புடன் 'ஓகே' சொன்னோம்' என்றார்

## கவிஞர் புலமைப்பித்தன் நதியாவுக்கு புத்திமதி!

அண்மையில் சென்னையில் "நிலவே மலரே" படத்தின் நூறுவது நாள் விழா கோலாகலமாக நடந்தது

இந்த விழாவில் அமைச்சர் வீரப்பன் உட்பட சினிமா வட்டாரப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அதிகமானோர் "நதியா கேட்கும் பெரிய தொகை"யைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்ற சாரப்பட பேசினார்கள்.

கவிஞர் புலமைப்பித்தன் பேசும்பொழுது —

"நதியா, படங்களுக்குக் கேட்கும் சம்பளத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ள வேண்டும். படத்துக்கு ஐந்துலட்சம், ஆறு லட்சம் ரூபா என்று கேட்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சம்பவங்களில் ஒற்றுமை காட்டும் இரு வெவ்வேறு மொழிக் கதைகள்

தமிழுக்குத் தொண்டுசெய்த தண்ணளியாளர் வரிசையில் ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் ஒரு தனியிடம் வகிக்கிறார். அவருடைய மகனுன வண பிரான்சிஸ் கிங்ஸ்பரி அடிகளார் வடமொழியில் உள்ள மகாபாரதத்தில் உள்ள சந்திரகாசன் என்னும் அரசிளங்குமாரன் ஒருவனுடைய கதையை "சந்திரகாரம்" என்னும் நாடகமாக்கியுள்ளார்.

சேரள தேசத்து அரசன் சுதர்மிகனின் பட்டமகிஷிக்குப் பிறந்தவன் சந்திரகாசன் இளமையில் அவன் தாய் தந்தையரை இழந்து அநாதை ஆகிறான். அவனை ஒரு கிழவி வளர்த்து வருகிறாள் இவன் ஒருமுறை வீதியில் விளையாடிக் கொண்டிருக்கும்போது குந்தள இராஜதானியின் மந்திரி இவனைப் பார்க்கிறான். சந்திரகாசனுடைய தேஜசைப்பார்த்த அவன் அறிஞர்களை அணுகியதில், சந்திரகாசனே அரசனாக வரும் சாத்தியம் இருப்பதாக அறிகிறான். குந்தள தேசத்தரசனுக்கு ஆண் வாரிசு இலாத படியால் தன் மகன் மதனை இளவரசி சம்பமாலினிக்கு மணம் செய்வித்து, தன்மகனை அரசனாக்க எண்ணியிருந்த மந்திரி எப்படியாவது சந்திரகாசனைக் கொன்று விடுவது என்று தீர்மானித்து விடுகிறான். கொலைகாரர் இருவரை அழைத்து தன் காரியத்தைச் சாதிப்பதற்கு நட

**காவிய நினைவுகள்: கிழக்கும் மேற்கும்**

வடிக்கை எடுத்தான். ஆனால் கொலைகாரரோ அப் பத்து வயது சிறுவனைக் கொல்லவில்லை மாறாக அவனது கால் விரல் ஒன்றைத் துண்டித்து எடுத்துச் சென்று விடுகின்றனர். காட்டில் அழுதுகொண்டிருந்த சந்திரகாசனை குளிந்த தேசத்துக் குறுநில மன்னன் கண்டு அவனைத் தன் சுவீகாரப் புத்திரனாக்கிக் கொள்கிறான்.

சந்திரகாசனின் வரவால் மகிழ்ந்த மன்னன் அவனைத்தன் இராஜாங்க விடயங்களில் கலந்து கொள்ள வைத்து அன்பாக வளர்க்கிறான். பதினொன்று ஆண்டுகள் கழிகின்றன. சந்திரகாசனின் நிர்வாகத்தினால் குளிந்த தேசம் செல்வத்தால் செழிப்புற்றது குந்தளத்துக்குத் திறை செலுத்தும் குளிந்த தேசத்து மன்னன் முன்னர் கொடுத்த திறையைப் போல் பத்து மடங்கை அனுப்புகிறான். இதனால் வியப்படைந்த குந்தள மன்னன், குளிந்த தேசத்துச் சிறப்புப்பற்றி திறை கொணர்ந்த தூதரை விசாரிக்கிறான். அதற்கு அவர்கள் "இறைக்குப் பதினொன்று ஆண்டுகளுக்கு முன்னே காக்விரல் ஒன்று துணிப்புற்ற நிலையில் பத்து வயதுப் பையன் ஒருவனைத் தத்தெடுத்ததையும் அப்பையனின் நிர்வாகச் சிறப்பினாற்றான் இவ்வளவு செல்வம்" என்று கூறுகின்றார்கள்.

இதனைக் கேட்ட மந்திரி திகைக்கிறான் குளிந்த தேசத்து அரசனை நேரிற் பாராட்டவேண்டுமென்று கூறிக் குளிந்த தேசம் செல்கிறான் அங்கு சந்திரகாசனைக் கண்டு திகைத்துப் பின் ஒருவாறு தெளிந்து, அந்தரங்க ஓலை ஒன்றைத் தன் மகன் மதனுக்கு அனுப்பவேண்டுமென்றும், அதற்குப் பொருத்தமானவன் சந்திரகாசனே என்றும் சூழ்ச்சி சொல்லி "சந்திரகாசனுக்கு குலம், குடி அழகு இவற்றைப் பாராது விஷத்தைக் கொடுக்குமாறு" கூறும் ஓலை ஒன்றை தன் மகன்

**உதங்கா**

மதனுக்கு அனுப்புகிறான்.

குந்தளத்துக்கு வந்த சந்திரகாசன் அங்குள்ள ஒரு பூஞ்சோலையிலே நித்திரை செய்யும்போது மந்திரியின் மகள். அவள் பெயர் "விஷயம்" என்பது., சந்திரகாசனிடத்து இருந்த ஓலையை எடுத்துப் பார்த்து திகைக்கிறாள் அப்பா அவசரமாக எழுதிவிட்டார். விஷயத்தைக்கொடு என்பதற்காக விஷத்தைக் கொடு என்று எழுதிவிட்டார். இதனை நான் அனுமதித்தால் பழி வந்து சேரும் என நினைத்து "ய" கரத்தை உள்ளே தீட்டிவிடுகிறாள். ஓலையைப் பெற்ற மதன் தன் தங்கையைச் சந்திரகாசனுக்கு மணம் முடித்துக் கொடுக்கிறான் பின்னர் அரசனின் மகள் சாம்பமாலினியை சந்திரகாசன் மணந்து கொள்கிறான் சம்பவத்தை அறிந்த மந்திரி மலைத்து நிற்கிறான் இதுதான் கதை

இனிமேல் நாங்கள் 7ம் வகுப்பில் படித்த "அரசனாகப் பிறந்தவன்" என்ற கதையைப் பார்ப்போம் இக்கதையின் மூல நூல் பற்றிக் குறிப்பிடப் படவில்லை.

அரசன் ஒருவன் வேட்டையாடும் பொருட்டுக் காட்டிற்குச் செல்கிறான். இருட்டிவிட்டதனால் ஓர் இடையன் வீட்டில் இரவைக் கழிக்கவேண்டியதாயிற்று இடையனுக்கு அழகான ஆண்குழந்தையொன்றுண்டு அது தொட்டிலில் படுத்திருந்தது. அதனைப் பார்த்த அரசனுக்கு இப்பிள்ளை தான் எனக்குப்பின்னே நாட்டை ஆளுவான் என்ற பிரமை ஏற்பட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள்

## ரோமக் குடியரசு சாம்ராஜ்யமாக மாறுகிறது

(சென்றவாரத் தொடர்)

எண்ணற்ற ரோம சேனாதிபதிகளில் இரண்டு பேர் முக்கியமானவர்கள் ஒருவன் 'பாம்பே' மற்றொருவன் ஜூலியஸ்சீஸர்.

சீஸர் பிரான்சையும்; பிரிட்டனையும் ஜெயித்தது உனக்கு தெரியும். பாம்பே கிழக்கே சென்று வெற்றி பெற்றான் இரண்டு பேருக்கும் நடுவே தீராத போட்டியும் பகைமையும் விளைந்தன இரண்டுபேருடைய ஆசைக்கும் அளவுகிடையாது.

செனட் சபையை இப்போது ஏன் என்று கேட்பாரில்லை. ஆனால்இரண்டு பேரும் அதனிடம் விசுவாசம் உள்ளவர்கள் போல நடித்துவந்தார்கள் கடைசியில் பாம்பே தோல்வியுற்றான்.

சீஸர் ரோம சாம்ராஜ்யத்தின் தலைவனாக விளங்கினான். ஆனால் ரோம் அரசியல் குடியரசு வகையைச் சேர்ந்ததாகையால் அவன் தன் இஷ்டப்படி எல்லாவற்றையும் செய்யமுடியவில்லை. ஆகவே அவனை சக்கரவர்த்தியாக முடிசூட்டுவதற்குஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவனுக்கும் அது விருப்பம் தான்.

ஆனால் ரோமாபுரியில் நீண்டகாலமாக வந்து கொண்டிருக்கும் குடியரசு முறை அவனைத் தயங்கும்படி செய்தது. இந்த குடியரசுமுறையை

### நேருவிடமிருந்து இந்திராவுக்கு

அவனாலும் மீறமுடியவில்லை. கடைசியில்புரூட்டஸ் என்பவனும் வேறு சிலரும் செனட் மன்றத்தின் மண்டபத்திலேயே அவனைக் குத்திக்கொன்று விட்டனர்.

ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர் எழுதிய 'ஜூலியஸ்சீஸர்' என்னும் நாடகத்திலே இக் காட்சி வர்ணிக்கப் பட்டிருக்கின்றது. அதைத்தான் நீ அவசியம் படித்திருப்பாயே!

கி. மு 44 ஆம் ஆண்டில் ஜூலியஸ் சீஸர் கொல்லப்பட்டான். ஆயினும் குடியரசு நிலைக்கவில்லை சீஸரின்சுவீகாரப் புத்திரனும் ஒன்றுவிட்ட சகோதரன் பேரனுமாகிய ஒக்டேவியன் என்பவனும் சீஸரின் ஆருயிர் நண்பனுமாகிய மார்க்கு அந்தோனி என்பவனும் சீஸரின் மரணத்திற்குப் பழிதீர்த்துக் கொண்டார்கள். ஒக்டேவியன் அரசனானான். குடியரசு முடிவுற்றது( செனட்சபை பேருக்கு இருந்து வந்தது. அதன் கையில் உண்மையான அதிகாரம் இல்லை

ஒக்டேவியன் அரசனானதும் அகஸ்து சீஸர் எனும் பட்டப்பெயரைத் தரித்துக் கொண்டான். அவனுக்குப்பின் வந்தவர்களெல்லாம் சீஸர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்

சீஸர் எனும் சொல்லே சக்கரவர்த்தி எனும்

(6 ஆம் பக்கம் பார்க்க

# ஐரோப்பாவில் பிறந்தவர் இந்தியாவில் பிரம்மஞான சங்கத்தை நிறுவிச் சேவைபுரிந்தார்

அந்தச் சிறுமிக்கு வயது ஏழு இருக்கும். அவள் ஆடிப்பாடிக் கொண்டே வீட்டை விட்டுக் கிளம்பினாள். அடுத்த வீட்டை நோக்கி ஓடினாள். அந்த வீட்டுக்குள் நுழைந்ததும் அங்கே விருந்தினராக வந்திருந்த ஒரு சீமாட்டியைக் கண்டாள்.

சீமாட்டியும் சிறுமியைப் பார்த்தாள். உடனே அவளை அன்போடு அருகில் அழைத்தாள் சிறிது நேரம் அவளுடன் பேசிப் பார்த்தாள். அவளுக்கு அச் சிறுமியை மிகவும் பிடித்து விட்டது.

உடனே அச்சிறுமியிடம் நீ என் வீட்டுக்கு வருகிறாயா? என் வீட்டிலேயே இருக்கலாம். அங்கே உன்னைப் போலவே ஒரு பெண் இருக்கிறாள். இருவரும் ஆனந்தமாக ஆடலாம் பாடலாம் உனக்கு வேண்டியதெல்லாம் நான் வாங்கித் தருவேன். வருகிறாயா? என்று கேட்டாள் சீமாட்டி.

சிறுமி கொஞ்சம் தயங்கினாள். பிறகு அம்மா என்ன சொல்லுவாளோ? என்று இழுத்தாள்.

வா உன் அம்மாவைக் கேட்கலாம். அம்மா ஒத்துக்கொண்டால் நீ கட்டாயம் என் வீட்டுக்கு வந்துவிட வேண்டும் சரிதானா? என்று கேட்டுக் கொண்டே அந்தச் சிறுமியை அவளுடைய வீட்டுக்கு அழைத்துச் சென்றாள் சீமாட்டி.

சிறுமியின் அம்மாவிடம், 'அம்மாநான் என் சொந்தக்காரப் பெண் ஒருத்தியை சுவிகாரம் எடுத்து வளர்த்து வருகிறேன். அவளுடன் சேர்ந்து படிக்கவும் விளையாடவும் உங்கள் பெண் இருந்தால் நன்றாயிருக்கும். இவளை நான் ஒரு குறையும் இல்லாமல் வளர்த்து வருவேன்- என்னோடு இவளை அனுப்பி வைப்பீர்களா? என்று கேட்டாள் சீமாட்டி.

அம்மா முதலில் தயங்கினாள். சிறிது நேரம் யோசனை செய்தாள். பிறகு 'நாமோ ஏழை. நம் வீட்டில் இருந்தால் சாப்பாட்டுக்குக்கூட இவள் கஷ்டப்பட வேண்டும். சீமாட்டி வீட்டுக்குச் சென்றாலாவது சீராக வாழலாம் என்று நினைத்து சரி உங்கள் விருப்பம்போல் செய்யுங்கள் என்றாள்.

சீமாட்டி அந்தச் சிறுமியை வீட்டுக்கு அழைத்துச் சென்றாள். தன்னுடைய சுவீகாரப் புதல்விக்கு அவளைத் தோழியாக்கினாள் இருவருக்கும் சீமாட்டியே நல்லமுறையில் படிப்புச் சொல்லிக் கொடுத்தாள். அயல் நாடுகளுக்கும் அவர்களை அழைத்துச் சென்றாள் இவற்றால் அச் சிறுமியின் அறிவும் அனுபவமும் வளர்ந்தன. பிறருக்குத் தொண்டு செய்யவேண்டும் என்ற நல்ல நோக்குத் தோன்றியது.

அவள் பிறந்ததும் வளர்ந்ததும் அதிகமான ஆண்டுகள் வாழ்ந்ததும் ஐரோப்பாவில்தான். ஆனாலும் அதிகமாகத் தொண்டு செய்தது இந்தியாவில் தான் ஆம்! அவள் இந்திய விடுதலைக்காகவும் அரும்பாடுபட்டார். சிறைக்குச் சென்றாள். அகில இந்திய காங்கிரஸின் தலைவியாகவும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாடுங்கள் புலவர்களே!

என். இராஜம் புஷ்பவனம்

ஓவியம் போலே காவியம் பாடிய
ஒளிபெரும் சுடரொளிக் கவிஞர்களே,
காவியம் பாடி களைத்தீரோ நீவிர்
காரணம் ஏனோ மௌனமானீர்?

பெண்களைப் பாடி கனிகளைப் பாடி
பெருமைகள் யாவும் திறன் பாடி
ஆண்மையைப் பாடி, அகிலத்தைப் பாடி
ஆழக் கருத்தை செப்புனீரே

விமர்சனக் கவிதை விண்ணியல்க் கவிதை
வெற்றியின் கவிதை விளக்கச் சொன்னீர்
அமர்க்களம் அந்நாள் கவியரங் கென்றால்
அயர்ந்து நீர் போனதேன் இந்நாளில்

இடியென்ன மழையென்ன இடுக்கண்கள்
நமக்கென்ன?
எழுவீர் பேனா வலிமை கொண்டு
படித்திடும் கவிதையில் புத்தொளி
பிறக்கட்டும்
பாடுங்கள் பாவலர் புலவர்களே!

## குடாநாட்டிற்கு ஐயாயிரம் இரு. மிளகு

தமிழர் வாழ்வில் மிளகு கறிச்சரக்குகளிற் சிறந்தது அதற்குக் கறி என்ற பெயர். மிளகு மருந்துச் சரக்குமாகும். மிளகாய் நேற்று வந்த பயிர். மிளகாய் மிளகுக்காக வந்ததால் மிளகாய் எனப் பெயர் பெற்றது. மிளகாய் உடம்புக்குக் கூடாது என்று வைத்தியர்கள் கூறுவர்.

ஒல்லாந்தர் காலத்திலும் யாழ்ப்பாணத்தார் மிளகு கொண்டே கறி சமைத்தனர் மிளகு வியாபாரத்தை ஏகபோகவுரிமையாகக் கொண்டிருந்த ஒல்லாந்தர் ஆண்டுதோறும் 50,000 இருத்தல் மிளகு யாழ்ப்பாணத்தில் விநியோகித்தார்கள்.

(நன்றி: மிக்வைற் செய்தி)

# தாடி மழித்ததும் போதும்! ஓடி ஒளித்ததும் போதும்!!

ஆசை கூடாது, அது அழிவைத் தரும் என்று தெரியாமலா சொன்னார்கள் ஆன்றோர்கள்? அப்படியிருந்தும் அந்த ஆசை என்மனதில் இடம்பிடித்து விட்டது. அப்படியொன்றும் மிகப் பிரமாதமான ஆசையல்ல அது.

அரும்பு மீசை முளைவிட்ட எந்தவொரு வாலிபனுக்கும் சாதாரணமாக எழும் அற்ப ஆசை அது. அப்படி என்ன ஆசை என்று திகைக்கிறீர்களா? ஆம், கூறுகிறேன்! ஒருமுறை முதன் முதலாக நானே எனக்குச் சவரம் செய்து கொள்ள வேண்டும் என்பதுதான் அது! எனது டியூசன் நண்பர்களும் எனது ஆசைக்குத் தூபமிட்டனர்! டேய் உன்னைப் பாத்தா படிக்கிறவன் மாதிரியே இருக்குதடா? சாமியார் மாதிரி இருக்குது கையில தாரடப்பியோட நாளைக்கு டியூசனுக்கு வா நாங்கள் எல்லாம் சேர்ந்து காசு வாங்கித் தாறம். அதுக்குப் பிறகாவது ஒழுங்கா ஷேவ் பண்ணிக் கொண்டு வாடா' என்று ஒரு சக மாணவ நண்பன் கூறினான். இன்னொருவனோ 'நீ ஒரே ஒரு நாள் மட்டும் ஷேவ் பண்ணிக் கொண்டு வாடா பிறகு பாரன் எங்கட கிளாஸ் பெட்டைகள் எல்லாம் ஏதோ ஹிந்திப்பட, ஆங்கிலப்படக் கதாநாயகனுட்டம் தெரிகிற உன்னைத்தான் திரும்பிப் பார்ப்பினம்' இப்படிப் பல நண்பர்கள் சொல்லவும் அன்று டியூசன் முடிய வீடு சென்று கண்

**நகைச்சுவை கட்டுரை**

ணாடியைப் பார்த்தால் நண்பர்கள் சொல்வது சரியென்று பட்டது தாடி கூட நன்கு வளர்ந்து விட்டது. ஷேவ் எடுத்துத்தான் பார்ப்போமே (ஹீரோ நினைப்புடன்) என யோசித்தேன்.

அடுத்த நாள் அப்பர் வீட்டில் இல்லாத காலை

'அன்புக்குரியோன்'

நேரம்! தாடி, மீசை முற்றுகைக்குரிய ஆயுதங்கள், உபகரணங்கள் (எல்லாம் அப்பரினுடையது தான்) எடுத்துக்கொண்டு ஆயத்தமாகிறேன். ஒரு பிளாஸ்டிக் கப்பில் நீர். இதிலே ஷேவிங் பிரசைத் தோய்த்து ஷேவிங் கிறீமில் பிரசைப் பூசி அதனை மேவாய் எல்லாம் நன்கு நுரைக்க நுரைக்கப் பூசி விடுகிறேன். பிறகுதான் ஒருயோசனை. எப்படி மேலுதட்டில் பூசுவது? கட்டாயம் நுரை மேற்சொண்டில் பிடிக்குமே? பிரசில் இருந்த நுரையைக் கையால் வழித்து மேலுதட்டில் பூசிக் கொள்கிறேன். அற்ப ஆயுளுடன் அது மறைந்து விடுகிறது என்ன வழி? பரவாயில்லை பிரசாலேயே பூசுவோம். கிறீம் நுரைதானே, பட்டால் பரவாயில்லை மேலுதட்டில் நைசாகப் பூசுவதாக எண்ணிக்கொண்டு ஒரு மாதிரிக் கொஞ்ச நுரை மூக்குக்குள்ளும், கொஞ்சம் வாய்க்குள்ளும் செல்லப் பூசி முடிக்கிறேன். பிறகு தான் கவனிக்கிறேன் தாடைப் பகுதியில் இருந்த நுரையைக் காணவில்லை என்ன நடந்தது? ஓஹோ, நான் மேலுதட்டிற்கு நுரை பூச தாடை நுரை அவ்வளவு நேரத்திற்குள் காய்ந்து விட்டது. பரவாயில்லை, மீண்டும் பூசிக் கொள்கிறேன்.

அப்பாடா பூச்சுவேலை ஒருவழியாய் முடிந்தது. இனி ஆயுதத்துடன் நேரடியாகக் களத்தில்

(6ஆம் பக்கம் பார்க்க)

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

சைவவித்தியா விருத்திச்சங்கம் நாடெங்கும் சைவப்பாடசாலைகளை ஆரம்பித்து வந்த போது அவற்றில் படிப்பிப்பதற்குச் சைவாசிரியர்கள் பற்றாக்குறையாயிருந்த போது, மேலதிக ஆசிரியர்களைப் பயிற்றுவதற்கு இடவசதி இல்லை என்று கல்விப்பணிப்பாளர் எழுதியதும், தாங்களே சைவாசிரியகலாசாலையை ஆரம்பித்தல் வேண்டுமென்று கௌரவ இராசரத்தினம் அவர்கள் சிந்தித்து, அதனை எங்கே ஆரம்பிக்கலாம், எப்போது ஆரம்பிக்கலாம் என்று யோசித்திருந்த வேளையில், காரைநகர் அருணாசலம் அவர்களின் மைந்தன் சிவபாதம் என்பார் அழுத வண்ணம் அங்கே வந்தார்.

'நான் உயரங்குறைந்தவன் என்று காரணம் கூறி, என்னை நேர்முகப் பரீட்சையில் தவிர்த்து விட்டார்கள்' என்று கூறிய சிவபாதம் மேலும் அழுதார். பதினெட்டு வயதான சிவபாதம் மேலும் வளரலாம் என்பதைப் பரீட்சையாளர் கருதவில்லைப்போலும்.

'அருணாசலம் ஐயாவின் மைந்தனுக்கும் உயரம் வேண்டுமாமோ? அவர்கள் கூறிக்கொண்டிருக்கட்டும். நான் சைவாசிரிய கலாசாலை ஆரம்பிக்கப் போகிறேன். நீர் வந்து படிக்கலாம், போய்வாரும்' என ஆறுதலும் அபயமும் அளித்த இராசரத்தினம் அவர்கள், உடனடியாகச் சைவாசிரிய கலாசாலையை எங்கே ஆரம்பிக்கலாம் என்று இடத்தைப்பற்றி யோசித்தார்.

சைவசமயத்தவர்கள் நியதி தத்துவத்திலும் காலதத்துவத்திலும் நம்பிக்கை உள்ளவர்கள். இன்னதுதான் நடக்க வேண்டும் என்றால் அது நடந்தே தீரும், நடப்பதும் இன்ன காலத்திலே தான் நடைபெறும் என்பதும் உண்மை. அக்காலம் மெய்வருந்த வேண்டாம் என்பது அற்புதமான தொடர். இராசரத்தினம் அவர்கள் தம்பணிகளைப் பற்றிச் சிந்தித்த வேளையில் பெரியார் ஒருவர் அவரிடம் வந்தார். அவர் மலேயாவில் துவிபாசகர் என்னும் முதலியார் உத்தியோகம் பார்த்த தர்பையா என்பவரின் மைந்தன், சீமை அப்புக்காத்தர் என வழங்கிய பரிஷ்டர் வேலை பார்த்த இராசேந்திரா என்பவர். அவர் திருநெல்வேலி எனும் செம்பாட்டுப் பூமியைச் சேர்ந்த பண்பாட்டுப் பெரியவர்.

## 1928 ஆம் ஆண்டு விஜயதசமியில் சைவாசிரிய கலாசாலை ஆரம்பித்தது

திருநெல்வேலி எனபது நல்லூர், கல்வியங்காடு, கந்தர்மடம், கலட்டி, தலையாளி, கொக்குவில், கோண்டாவில், இருபாலை, கட்டைப்பிராய் முதலான ஊர்களின் நடுவே யமைந்தது. பழைய காலத்தில் பாண்டிநாட்டு மழவர் குடியினர் வந்து நெருக்கமாகக் குடியேறிய வளமுள்ள பகுதி அது. அங்கேதான் தமிழரசு காலத்துப் புகழ்பெற்ற ஞானப்பிரகாசத்தம்பிரான் சுவாமிகளின் முன்னோர் வாழ்ந்து வந்தனர் ஞானப்பிரகாசத்தம்பிரான் சுவாமிகள் தமிழ் நாடறியச் சைவமும் தமிழும் வளர்த்தவர் சிவஞானசித்தியாருக்குச் சிறந்தவுரை எழுதியதோடு வடமொழியிற் பல நூல்கள் எழுதியவர்.

இத்தகைய புகழ் பெற்ற ஞானப்பிரகாசத் தம்பிரான் குடும்பத்தினரின் வழி வந்தவரே வேதவனத்தார். வேதவனத்தாரின் செல்வப் புதல்வியே ஆறுமுகநாவலர் அவர்களின் தாயார் சிவகாமி திருநெல்வேலியில் நீலாயதாட்சியம்பாள் சமேத காயாரோகணேசுவரர் கோயிலும் நகரிலுள்ள சிவாலயம் திருநெல்வேலியில் சைவப்பற்றுள்ள இளைஞர்கள் 1910 ஆம் ஆண்டிலே இந்துவாலிபர் சங்கம் அமைத்துப் பணி செய்து வந்தார்கள். திருநெல்வேலியிலே சேர் இராமநாதன் அவர்கள் தமது பரமேஸ்வராக் கல்லூரியைப் பல்கலைக்கழகமாக மலரும் வகையில் 1921 ஆம் ஆண்டிலே அமைத்தார். திருநெல்வேலியின் சைவப்பண்பாட்டுச் செம்பாட்டு நிலம், ஆங்கிலேயர் காலத்து அரசாங்கத்து விவசாயத் திணைக்களத்தையும் கவர்ந்தது அவர்கள் அங்கே விவசாயமாதிரிப் பண்ணையமைத்து வழிகாட்டியும் வந்துள்ளார்கள். சைவத்தைக் காத்துப் பரிபாலித்து வளர்ப்பதற்கு எழுந்த சைவ வித்தியாவிருத்திச் சங்கமும் திருநெல்வேலியிலே முன்னின்று வளர்ந்து வந்தது. திருநெல்வேலி எல்லா வழிவகைகளாலும் முன்னேற்றமடைந்து வந்த பழைய ஊர். பண்பாட்டுப் பேரூர் பழைமை பேணும் செந்தமிழ் அன்பும் சிவநேயமும் பொருந்திய செல்வர்களின் உறைவிடம்; திருவிருந்தவூர்.

அன்று இராசரத்தினம் அவர்களைக் காணவந்த திருநெல்வேலி இராசேந்திரம் அவர்கள், திருநெல்வேலியில் உள்ள மாளிகை போன்ற தம்முடைய பெரிய வீட்டில் சைவாசிரிய கலாசாலையை அந்த ஆண்டிலேயே நல்ல நாளில் ஆரம்பித்து விடலாம் என்று உடன் தேவைக்கு உள்ளன்போடு உதவ முன் வந்தார் அந்தப் பெரிய மனையே பிற்காலத்தில் தம்பி அன் கொம்பனி எனப் பெயர் பெற்ற நிதிநிறுவனம் நடைபெற்ற இடமாகும்.

சைவாசிரிய கலாசாலையின் ஆரம்ப வகுப்பு 1928 ஆம் ஆண்டின் விஜயதசமி நாளில் மங்கலகரமாக ஆரம்பிக்கப் பெற்றது அன்றைய நாள் வகுப்பில் வந்திருந்த பதினொருவர். முன்னர் கோப்பாய் ஆசிரிய கலாசாலைப் புகுமுகத் தேர்வில் சித்தியெய்தி, இடவசதியில்லை என்னும் நொண்டிச்சாட்டுக் காரணமாக அனுமதி பெறாதிருந்தவர்கள். அவர்களுள் ஒருவரே காரை

★ க. சி. குலரத்தினம் ★

நகர் அருணாசலம் அவர்களின் மைந்தரான சிவபாதம்.

அன்று வந்து சேர்ந்த பதினொருவரும், நாளடைவில் வந்து சேர்ந்தவர்களும் பல பாகங்களிலுமிருந்து வந்தவர்களாவர். அவர்கள் மட்டுவில் ஏ. கே. வல்லிபுரம், அவரையடுத்துத் துன்னாலை ஆழ்வாப்பிள்ளை, மட்டுவில் வேலுப்பிள்ளை, சாவகச்சேரி சுந்தரராசஐயர், சங்கத்தானை இயகராச ஐயர், சிறுப்பிட்டி சதாசிவம், கரவெட்டி கணபதிப்பிள்ளை, கரவெட்டி கந்தவனம், விழிசிட்டி கதிரிப்பிள்ளை, மந்திகை சைவத்திரு தாமோதரம் பிள்ளை, உடுப்பிட்டி சைவத்திரு சின்னத்தம்பி, கரணவாய் சைவத்திரு நடராசா, மாணவ ஆசிரியர் கந்தப்பு, மந்திகை கருணாகரன், சாசுபதி ஆகியோரும் பிறரும் வந்திருந்தார்கள். இவர்களோடு மட்டக்களப்பு மாநிலத்திலிருந்தும் ஒரு சிலர் நாளடைவில் வந்திருந்தார்கள். இங்ஙனமாகப் பயிற்சி பெற்றவர்களுள் பிராமணர், சைவக்குருமார் ஆங்கிலம் நன்கு பயின்றவர்களும் இருந்தார்கள்

இவர்களின் வேறாய் 1929 ஆம் ஆண்டிற் சேர்ந்து படிப்பதற்காகப் புகுமுகத் தேர்வு வகுப்பில் படிப்பதற்காக எண்பத்தேழு பேர் வந்திருந்தார்கள்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைகளைச் சீராக நடத்துவதற்கு
# 2 கோடி ரூபா முதலீடும், ஆட்குறைப்பும்
## அவசியம் என்கிறார் சபையின் தலைவர்

(பகுதி II)

கச்சேரி செல்லும் மினி பஸ்கள் நிற்குமிடத்தில் கச்சேரி பஸ்ஸில் இருந்த ஒருவரிடம் அணுகி, இ. போ ச பற்றி கேட்கிறேன்

தம்பி நீ சொன்னதன் பிறகு தான் இ. போ. ச. என்று ஒன்று ஓடினதாய் எனக்கு ஞாபகம் வருகுது வாயெல்லாம் பல்லாக அளவோடு சொல்லி அதோடு விட்டுவிட்டார்.

அப்போது அவ்விடத்தே வந்த அச்சுவேலி மினிபஸ்ஸில் இருந்து ஒருவர் அவசரமாக இறங்குகிறார்.

நெல்லியடியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் அவர்

"தம்பி நான் நெல்லியடியில் இ. போ. ச. பஸ்ஸில் ஏறி யாழ்ப்பாணத்திற்கு டிக்கெட் எடுத்தனான் ஆனால் வழியில் அச்சுவேலியில் இறங்கி மினி பஸ்ஸில் வாறன்"

"ஏன் இடையில் பஸ் மாறினீர்கள்?"

"நெல்லியடியிலிருந்து அச்சுவேலி வர ஒரு மணித்தியாலம் செல்லுது இ. போ. ச. காரருக்கு இஞ்சால வர மேலும் ஒரு மணித்தியாலம் எடுக்கும். மினிபஸ்ஸில ஏறி அரைமணித்தியாலத்தில வந்திட்டன்.... காசு பெரிதில்லை தம்பி, நேரம்தான் பெரிது

சொன்னபடியே மேலும் நேரத்தை என்னுடன் வீணடிக்க விரும்பாது பறந்தோடி விட்டார்.

எங்கள் சம்பாஷணையைக் கவனித்துக் கொண்டிருந்த ஒருவர் நெருங்கி வந்து "நீங்கள் பேப்பரோ?" எண்டு 'ஓ! சஞ்சீவி...... இ போ ச. பற்றி சனத்திட்டை அபிப்பிராயங்களை அறியிறன்.

துப்புரவு இல்லை

"நான் ஒன்று சொல்லுறன் குறியுங்கோ இ. போ. ச பஸ்கள் மினிபஸ்கள் மாதிரி துப்புரவு இல்லை மினிபஸ்களை எவ்வளவு துப்புரவாய் கழுவித் துடைத்து வைச்சிருக்கிறாங்கள்."

முன்னால் நின்ற பஸ்ஸை உதாரணத்துக்கும் காட்டுகிறார்.

சிவப்பான இ போ ச. பஸ் மண்நிறமாகத்தெரிகிறது. கடைசியாக யாழ்ப்பாணத்தில் மழை

டிப்போவில் இறங்கினேன்.

அனுமதி பெற்று உள்ளே சென்று உயர் உத்தியோகத்தர் ஒருவரிடம் என்னை அறிமுகப் படுத்திக் கொள்கிறேன்

வவுனியா முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர் டிப்போக்களை உள்ளடக்கியது வடபிராந்திய

காரணம் தான் முன்னர் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தினம் 5,000 லீற்றர் டீசலை எமக்குத் தந்து வந்தது இப்போ நாமே லொறிகளில் அநுராதபுரம் சென்று எடுக்க வேண்டியுள்ளது" என்றார்

அவரிடமிருந்து விடைபெற்று ஓர் உயர் பொறியியலாளரைச் சந்தித்தேன்,

### அரச பஸ்சேவை: வடக்கில் அதன் மந்த நிலை; கஷ்ட நஷ்டம்

பெய்தது எப்போது என்று அதைப்பார்த்து புரியக்கூடியதாக இருந்தது.

அங்கிருந்து திரும்பி முன்னிருந்த புத்தகக் கடைக்குள் புகுந்தேன் அங்கிருந்த புத்தக வியாபாரம் செய்யும் ஒருவரிடம் விசாரிக்கிறேன்.

"இ. போ ச.ஓடாமல் விட்டதோடை இந்த பஸ்ராண்டுக்கு முன்னாலை இருக்கிற கடைகளில வியாபாரம் குறைஞ்சு போச்சு பேசாமல் பஸ் ஸ்ராண்டை மினிபஸ் காரரிட்டை ஒப்படைத்தால் எங்களுக்கும் நல்லம், சனத்துக்கும் நல்லம்"...

அந்த யோசனையை யிட்டு நல்லாய் யோசித்தபடி வசாவிளான் மினி பஸ்ஸில் சென்று ஏறுகிறேன்

75 பஸ்களே சேவையில்

கோண்டாவில் பஸ் போக்குவரத்துச்சபை.

தினமும் 260 பஸ்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டும். ஆனால் இன்று ஓடுவது 75 பஸ்கள் மட்டும்.

"மட்டக்களப்பு பஸ் ஸ்ராண்டு ஏன் 100 ரூபா விசேடமாக வாங்குகிறீர்கள்"?

"அது.. எங்கடை நிர்வாகத்திற்கு இப்ப முதல் தேவை காசு, 2 கோடி ரூபா கடன் உள்ளது. மேலும் வெளிமாவட்டங்களுக்கான தூரசேவை பஸ்ஸில் ஈடுபடும் ஊழியர்களுக்கு நாங்கள் மேலதிகப் பட்டா கொடுக்க வேண்டியுள்ளது. "

தான் சொல்வது தமக்கே சரியில்லை என்பது போல் பேச்சை இடைநிறுத்துகிறார்.

எரிபொருள் கட்டுப்பாடு 'டீசல் தட்டுப்பாடு என்கிறார்களே !!"

ஓரளவுக்கு அதுவும்

வடபகுதிக்கு ஒட்சிசன் சிலிண்டர் வராததால் ஒட்டு வேலைகள் செய்ய முடியாமல் பஸ்கள் ஓட்டை ஒடிசலுடன் நிற்கின்றன. உதிரிப் பாகங்கள் வாங்க நிர்வாகத்திடம் பணம் இல்லை. ஒரு பஸ்ஸின் சில பாகங்களை கழற்றி அடுத்த பஸ்ஸிற்குப் பூட்டுகிறோம்.

ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை பஸ்களுக்குப் புதிதாக வெளி அமைப்பு மாற்ற வேண்டும். இதற்காக மல்லாகத்தில் புதிய பஸ் உடற்கோப்பு நிலையம் ஒன்று திறக்கப்பட்டிருந்தது. சில கொள்ளைச் சம்பவங்களால் இப்போது அது பூட்டப்பட்டுள்ளது.

'புதிதாக 43 என்ஜின்கள் எமக்கு அவசரம் தேவைப்படுகின்றன.

30 லட்சம் ரூபா இருந்தால் கடைசி 150 பஸ்களையாவது திருத்தி ஓட விடலாம்.

பல பொறியியலாளர் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தேடிச்சென்றுள்ளதால் மேலும் நிலைமை சிக்கலாகியுள்ளது' என்றார் அவர்.

தலைவர் பேசுகிறார்

வடபிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவர் திரு. எஸ். சனகரட்ணம் அவர்களைக் கடைசியாகச் சந்தித்தேன்.

அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் தந்த பதில்கள் வருமாறு:

கே: வடபிராந்திய சபை அரசுடன் எவ்வித தொடர்பை வைத்துள்ளது. சம்பளக் கொடுப்பனவுகளை அரசு செய்கிறதா அல்லது வருமானத்திலிருந்து நிர்வாகம் கொடுக்கின்றதா?

ப: 1958 இல் அரசு தனியாரிடமிருந்த பஸ்களை தேசியமயமாக்கியது 1978 வரை தனது கட்டுப்பாட்டிலே வைத்திருந்தது.

1978 இல் பிராந்திய ரீதியாக அதிகாரங்களைப் பரவலாக்கியது ஆனால் கட்டுப்பாட்டைத் தான் வைத்துக் கொண்டது சுயேச்சையாக இயங்கும்படி பணித்தாலும் அதை அமுலாக்க அரசால் முடியவில்லை

பள்ளிக்கூட சேவை, கட்டுப்படியாகாத கிராமப்புற சேவைகளுக்காக அரசு மாதாந்தம் 14 லட்சம் ரூபாவைத் தந்து உதவுகிறது.

எரிபொருள், ஊழியர் சம்பளத்திற்காக55லட்ச ரூபா தேவைப்படுகிறது. முன்னர் 90 லட்சமாக இருந்த மாதவருமானம் இப்போது 25 லட்சமாகக் குறைந்துள்ளது.

மேலதிக நட்டங்களைச் சமாளிக்க திறைசேரியிடம் 210 லட்சம் ரூபா கேட்டுள்ளோம்.

கே: திடீரென இ போ. ச நட்டத்தில் ஓடக் காரணம் என்ன?

ப: தனியார் மினிபஸ் சேவையுடன் போட்டி போட முடியவில்லை அவர்கள் சொந்த நலன் உடையவர்கள். நாமோ பொதுநலனைப் பார்ப்பவர்கள். சில எமது கட்டுப்பாட்டுக்குள் அடங்காதவை பஸ் எரிப்புச் சம்பவங்கள். அவற்றால் சுமார் 10 கோடி ரூபாவை இழந்துள்ளோம்.

பஸ் எரிப்பின் விளைவாக அரசு இங்கிருந்து 40 புதிய பஸ்களைத் திருப்பி எடுத்துக் கொண்டது. அதில் 20 பஸ்களைப் பின்னர் திருப்பித் தந்தது.

மேலும் இன்றைய நாட்டின் அரசியல் சூழ்நிலை டீசல் தட்டுப்பாடு மக்களின் நடமாட்டம் குறைந்ததும் நட்டத்திற்குக் காரணங்கள்.

வீதத்தில் ஊழியர் போதுமானது ஆனால் இங்கே ஒரு பஸ்ஸிற்கு 10 பேர் என்ற வீதத்தில் ஊழியர்கள் உள்ளனர். மேலதிகமாக 500 பேர் வரை உள்ளனர். அதனால் இப்போது மெது மெதுவாக ஆட்குறைப்பு செய்கிறோம். தானாகவே விலகும் ஊழியர்களுக்கு இருபதினாயிரம் ரூபா

### பேட்டி: எஸ். ஜே. பி. ரட்ணதுரை

கே: இவற்றை எல்லாம் சீர்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டும் என எதிர் பார்க்கிறீர்கள்?

ப: முதலில் நாட்டு நிலைமை சீரடைய வேண்டும். அடுத்து திறைசேரி நாம் கேட்டுள்ள 2கோடி 10லட்சம்ரூபாவை முதலீடாகத் தந்துதவ வேண்டும் ஏனெனில் உதிரிப் பாகங்கள், ஒயில், ரயர், டீசல் என்ஜின் ஆகியனவை கையிருப்பில் இருக்க வேண்டும்.

மேலும் ஊழியர்களை ஆட் குறைப்புச் செய்ய

பணம் மேலதிகமாகக் கொடுத்து திறைசேரி உதவிசெய்கின்றது.

தலைவரிடமிருந்து விடைபெற்று வெளியே வருகின்றேன்.

ஆட்குறைப்பு செய்யப் பட வேண்டிய ஊழியர்கள் ஆங்காங்கே நின்று அளவளாவுகின்றனர்!

பெற்றெடுத்த அரசும், தத்தெடுத்த மக்களும் கைவிட்ட நிலையில் பல

### மக்களின் மனக்கோலங்கள்

வேண்டும்.

கே: ஆட்குறைப்பு பற்றி விரிவாக கூறமுடியுமா?

ப: இப்போது 2,000 பேர் எமது சபையில் வேலை செய்கிறார்கள் ஒரு பஸ்ஸிற்கு 7 பேர் என்ற

பஸ்கள் அநாதைகளாக ஆங்காங்கே நிற்கின்றன?

டிப்போவை விட்டு வெளியே வந்தேன்

அவ்வழியே வந்த மினி பஸ்ஸை மறித்து வீடு திரும்பினேன். ✶

## சம்பவங்களில்...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

டது. இரவு முழுவதும் இக்குழந்தை வளர்ந்து தன் நாட்டிற்கு அரசனாகுவதாகக் கனக் கண்டான். அவனது மனம் குழம்பிவிட்டது. காலையில் இடையன் வெளியே சென்றதும் அக்குழந்தையை எவருக்கும் தெரியாது எடுத்துச் சென்று ஒரு பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டுவிடுகிறான், நிம்மதியோடு வீடு திரும்பினான், அரசன் அவனுக்கு அன்று ஒரு பெண் குழந்தை பிறந்தது. இதையிட்டு மிகவும் கவலையில் ஆழ்ந்தான் அரசன்.

பதினான்கு ஆண்டுகள் கழிந்தன அரசன் வேட்டைக்குப் போனான். களைப்படைந்த அவன் ஒரு ஆலையாளியின் வீட்டிற்குச் சென்று சிறிது திராட்சை ரசம் கேட்கிறான் ஏறத்தாழப் பதினான்கு வயதுடைய பையன் ஒருவன் திராட்சை ரசத்தை கொண்டு வந்து அரசன் முன் வைக்கிறான். அவனைப் பார்த்த அரசன் ஆலையாளியிடம் "உன் மகன் நல்ல அழகனாக இருக்கிறான்" என்று கூறுகிறான் ஆலையாளியோ, "மைக்கல் இவனது பெயர் இவன் என் மகனல்லன் பதினான்கு ஆண்டுகளுக்கு முன்னே ஆற்றில் மிதந்து வந்தான். பிள்ளையில்லாத நான் அவனை எடுத்து வளர்த்து வருகிறேன். என்றான் அரசன் திகைக்கிறான் தன்னை சுதாரித்துக் கொண்டே மைக்கலை கல்வி கற்பிப்பதற்காக தன் அரண்மனைக்கு அழைத்து வருமாறு கொலைகாரர் இருவரை ஏவி விடுகிறான். அவர்கள் நடுவழியில் திடீரெனப் பாய்ந்து மைக்கலைக் கத்தியால் குத்திவிட்டு ஓடிவிடுகின்றனர் மைக்கல் ஒழிந்தான் என அரசன் நிம்மதியாக இருந்தான்.

அரசனின் மகளுக்கு மணப்பருவம் வந்துவிட்டது அவளது திருமண ஒழுங்குகளை அரசன் கவனித்துக் கொண்டிருக்கும் வேளை துறவியர் சிலர் வீரர் சிலரோடு அரண்மனைக்கு வருகின்றனர்.

அவர்களில் ஒரு வீரனைக் கண்டதும் அரசன் பிசாசைக் கண்டதுபோல் மிரண்டான் அங்கே மைக்கல் நின்றான். அவனைப் பற்றி விசாரித்த போது துறவிகள் ஏழு வருடங்களுக்கு முன்னே காயப்பட்டுக் கிடந்த மைக்கலைக் காப்பாற்றிய விதத்தையும், அவனை வளர்த்து வீரனாக்கிய கதையையும் கூறினார்கள் அரசன் சூழ்ச்சி செய்ய எண்ணி மைக்கலை தன்னுடைய அரண்மனையில் வேலைக்கமர்த்திக் கொண்டான்.

பத்து நாட்களின் பின்னர் மைக்கலிடம் ஓர் ஓலையைக் கொடுத்து தன் மகள் வசிக்கும் ரோஜாவின் மாளிகைக்கு அனுப்புகிறான் மாளிகையின் பூந்தோட்டத்தில் மைக்கல் இளவரசியைச் சந்திக்கிறான் அவள் ஓலையைப் பார்த்ததும் திகைக்கிறாள் அதில் இவ்வோலை கொண்டுவருபவனை உடனே கொல்லுமாறு மாளிகைப் பொறுப்பதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இளவரசி அவ்வோலையை எரித்துவிட்டு "இவ்வோலையை கொண்டிருப்பவனை இளவரசிக்கு உடனே திருமணம்செய்து வைக்குமாறு" எழுதி மாளிகை அதிகாரியிடம் கொடுக்கிறாள். அரச கட்டளையல்லவா.உடனே திருமணம் நடைபெறுகிறது

நடந்ததை அறிந்த அரசன் யாதும் செய்ய முடியாது விதி வலிதே என்று மனம் தேறி மகளையும் மருமகனையும் வரவேற்கிறான் மைக்கல் இறுதியில் அரசனாகிறான்.

இவ்விரண்டு கதைகளிலும் கருப்பொருள் ஒன்றாகவும், நிகழ்வுகள் ஒன்றாகவும் உள்ளதை அவதானித்தால் ஏதோ மூலம் ஒன்றே போற் தெரிகின்றது மந்திரியின் சூழ்ச்சியும், வீழ்ச்சியும், ஆங்கில அரசனின் சூழ்ச்சியும் வீழ்ச்சியும் இறுதியில் ஒரே விதமாக நடந்த திருமணங்களும் இருகதைகளுக்கும் ஒற்றுமையாக விளங்குகின்றன. ✶

## காலத்தால்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளில் வழங்க ஆரம்பித்தது 'கெய்சர்' 'ஜார்' எனும் சொற்கள் 'சீஸர்' எனும் சொல்லிலிருந்து பிறந்தவைகளே ஆகும். கெய்சர் எனும் சொல் ஹிந்துஸ்தானி மொழியிலும் நெடுங்காலமாக வழங்கி வருகிறது. கெய்சர்—இ—ரோம் (ரோம் சக்கரவர்த்தி), கெய்சர்—இ—ஹிந்த (ஹிந்துஸ்தான் சக்கரவர்த்தி) என்று ஹிந்துஸ்தானியில் சொல்கிறோம்

இங்கிலாந்து அரசராகிய ஜோர்ஜ் மன்னர் 'கெய்சர் —இ—ஹிந்து' எனும் பட்டத்தை மகிழ்ச்சியுடன் பூண்டு விளங்குகிறார்.

இன்று ஜெர்மனி தேசத்துக்குக் கெய்சர் போய்விட்டார் ஆஸ்திரியா தேசத்துக் கெய்சரும் துருக்கித் தேசத்துக் கெய்சரும் அவ்வாறே ஆனார்கள்.

ருசியதேசத்து 'ஜாரை'யும் காணோம்' இங்கிலாந்து தேசத்து அரசர் ஒருவர்தான் இன்று ஜூலியஸ் சீஸரின் பெயரையும் பட்டத்தையும் தாங்கி நிற்பவர்.

ரோம ராஜ்ஜியத்துக்காகப் பிரிட்டனை ஜெயித்துக் கொடுத்த ஜூலியஸ்சீஸரின்பெயரை பிரிட்டிஷ் மன்னர் தரித்து நிற்பது ஆச்சரியமல்லவா?

ஆகவே ஜூலியஸ் சீஸரின் பெயர் சாம்ராஜ்சிய காம்பீரியத்துக்கு அறிகுறியாகவிளங்கிறது.

கிரீஸில் பார்சலஸ் எனும் இடத்தில் சீஸர் பாம்பேயிடம் தோல்வியுற்றிருந்தால் என்ன ஆகியிருக்கும்? அப்போது ஒருவேளை பாம்பே சக்ரவர்த்தியாகி இருக்கலாம்.

'பாம்பே' எனும் சொல் சக்கரவர்த்தி எனும் பெயரில் வழங்க ஆரம்பித்திருக்கும். ஜெர்மனியின் சக்கரவர்த்தியான இரண்டாவது வில்ஹெம் தம்மைப் பாம்பே என்று அழைத்துக் கொண்டிருப்பர்;ஜோர்ஜ் மன்னரும் 'பாம்பே—இ—ஹிந்து' எனும் பட்டத்துடன் விளங்குவார்.

(தொடரும்)

## தாடி மழித்ததும்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இறங்கி மோத வேண்டியதுதான் மிச்சம்.

வேண்டிய வேண்டாத தெய்வங்களை எல்லாம் உச்சரித்தபடி, முதன் முதலில் காம்பிலிருந்து வெளிக்கிட முயலும் இராணுவவீரரின் கரங்களைப்போல நடுங்கும் கரங்களுடன் ரேசரை எடுக்கிறேன். ஏன் இந்தப் பயம் என்று கேட்கிறீர்களா? ஒன்றுமில்லை, ஒரு துளி இரத்தத்தைக் கண்டு ஒன்பது முழம் மன்னிக்க வேண்டும் ஒன்பது மீற்றர் (இபபோது மீற்றர் முறை அல்லவா) ஓடுகின்ற ஒரு சின்னப் பயம் தவிர வேறு பயமில்லை ரேசரை எடுத்து முதலில் மேலுதட்டினை நோக்கி ஓர் போராளிக்குரிய அவதானத்துடன் கொண்டு செல்கிறேன். சென்று மெல்லிதாக இழுத்துப் பார்க்கிறேன். நுரை தான் ரேசருடன் வழிபடுகிறது. மயிரில்லை! மீண்டும் மீண்டும் முயற்சிக்கிறேன் பலனில்லை. ஷெல் விழுந்தும் மீண்டும் வேடிக்கை பார்க்க ஓடி வரும் மனிதர்களைப்போல இந்த மயிர்களும் எனக்குத் தோன்றுகின்றன. ஒரு மாதிரி கோணலாக ரேசரைப் பிடித்து இழுத்துப் பார்க்கிறேன். பலனேயில்லை ஒரே எரிச்சல், என்ன இழவோ! வழிபட மாட்டேன் என்கிறதே. இதற்குள் ரேசரின் பயம் சற்றுப் போய்விடவே, சற்று ஆத்திரத்துடன் காலையில் கடையைத் திறந்தவுடன் முதன் முதலாக வரும் வாடிக்கையாளர் கடன் கேட்கும் பொழுது என்ன மனநிலையில் கடை முதலாளி இருப்பாரோ அதே போல் ஆத்திரத்துடன் இழுக்க ஆஹா! என்ன அற்புதம் இழுபட்ட அவ்வளவு மேலுதட்டு மீசை மயிர்களும் அவுட். கடலில் தத்தளித்துக் கனடா போன தமிழகதியின் சந்தோஷத்துடன் அதே சற்று வேகமாக இழுக்கிறேன். இழுத்து முடிக்கவும் ஏதோ நமநமவென்ற எரிச்சல். பயங்கர எரிச்சல் மேல் உதட்டில் இரத்தம் மெல்லிய கோடாக அரும்பி வருகிறது! அதை நிற்பாட்ட எண்ணி கப்பிலிருந்த நீரில் கையை விட்டு நனைத்து விரல்களை அந்த வெட்டுக்காயத்தின் மேல் நீர் விழும்படி இடுகிறேன். உப்புநீரும் சோப்பு நீரும் பிளேட் காயத்தில் பட்டால் எப்படி இருக்கும். போதாக் குறைக்கு சோப் நுரையையும் கரைத்துக் கொண்டு மீசை மகாவலியாகச் சொல்லாமல் கொள்ளாமல் வாய்க்குள் இறங்க, அதனையும் குடித்துத் தீர்த்தேன். இனி என்ன செய்வது? கால் மீசைப்பகுதி எடுத்தாய் விட்டது. அரைமணி நேரம் கழிந்தபின் சற்றுப் பெரிய 4 கீறல்களுடனும் சில சிறிய கீறல்களோடும் ஷேவிங்கை முடிக்கிறேன். எனது நண்பர்களைக் கண்டால் ஓடி ஒளியும் நிலை எனக்கு!

ஆக! எனது மனத்தினில் ஆபிரகாம்லிங்கன் சாள்ர்ஸ் டாவின் போன்ற அறிஞர்கள் தாடி வளர்க்கவில்லையா? என்ற எண்ணம் தோன்ற— நானும் எதிர் காலத்தில் தாடி வளர்க்க முடிவு எடுத்தேன்! ✶

## ஐரோப்பா.-.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

விளங்கினாள் சென்னையில் பிரம்மஞான சபையை ஆரம்பித்து அதற்குப் பல கிளைகள் உலகம் முழுவதும் வியாபித்து வளர வழி வகுத்தவர். அதன் தலைவியாக இருபத்தாறு ஆண்டுகள் இடைவிடாது தொண்டாற்றினார்.

அவரை யாரென்று தெரிகின்றதா? இந்திய மக்களால் அன்புடன் அன்னை வசந்தை என அழைக்கப்பட்ட டாக்டர் அன்னி பெஸண்ட். அவரது நினைவு தினம் நாளை செப்டம்பர் 21ஆம் திகதியாகும்.

## அலைபாயும்..

(3ஆம் பக்க தொடர்ச்சி)

துள்ளது. ஈஸ்வர தியானத்தை முறைபாகச் செய்து அப்பியாசம் பண்ணும் இறைவனைப் பற்றியதாகுமளவு மனது வெளிவிஷயங்களிற் செல்லாது - ஒருமுகப்படும் புலன்களில் பற்றின்மை வைராக்கியம் எனப்படும் இது அநித்தியமான உலகம் நித்தியமான வஸ்து கடவுளே என்று மனம் உலக ஆசை என்னும் வலையை அறுத்தெறிதல், வைராக்கியம் எனப்படும்.

சுவாமி விவேகானந்தர் மனதை அடக்க ஒரு வழி கூறுகிறார். "மனம் சதா இறைவனையே நாட வேண்டும், வேறு எண்ணங்கள் மனதில் இடம் பெற அனுமதிக்கக் கூடாது தொடர்ச்சியாக ஈஸ்வர சிந்தனை மனதில் ஓடிக்கொள்ள வேண்டும். இது கடினமாக ஆரம்பத்தில் இருக்கும். அப்பியாசத்தால் மனதில் இறைவனை நினைக்கச் செய்யலாம். இன்று நாம் இருக்கும் நிலைக்கு நமது முந்தைய எண்ணங்களே காரணம்,எண்ணங்களை சீர் தூக்கி நல்ல எண்ணங்களை எண்ணினால் நமது நிலையில் நிச்சயமாக மாற்றம் ஏற்படும் உலக ஆசாபாசங்களில் தினமும் மனதைச் செலுத்துவதினால் விலங்கின் இயல்பு ஏற்பட்டுள்ளது. நாங்கள் இறைவனின் அம்சம், தெய்வத்தன்மை படைத்தவர்கள் என்ற சுய இயல்பை இழக்கலாமா? இதற்கு நாம் செய்ய வேண்டியது என்னவெனில், இறைவனைப்பற்றி சிந்தித்தல், இறைவன் புகழைக் கேட்டல், இறைவனைப் பற்றிப் பேசுதல், இறைமயமான நூல்களைப் படித்தல் இப்படியாக மனதை இறைவனிடம் முழுமையாகத் திருப்ப எங்கள் வாழ்வு பேரின்பத்தையும் சாந்தியையும் அடையும்.

மனம் என்பது எண்ண அலைகளின் தொடரே ஆகும். எண்ண அலைகளின் முடிவு செயலாக வடிவெடுக்கின்றது. ஒரு மனிதன் செயல்களைக் கட்டுப்படுத்தலாம். செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு கர்ம யோகம் துணைபுரிகின்றது மனிதன் செயல் புரியாமல் ஒரு நிமிடமேனும் இருக்க முடியாது. கர்ம வினையிலும் தனக்கென கர்மம் புரிபவன் கீழோன் மற்றவர்களுக்காக கர்மம் புரிபவன் மேலோன் ஆகின்றான்.தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவனுக்கு மனதில் அமைதியுடனும், இருதயமும் இயல்பாக இயங்கும் தன்மையுடையதாகவும், நிறைவான ஆனந்தத்தையும் பெறுகிறான். பிறர்க்கென வாழ்பவனுக்கு தேகப்பற்று மனத்தின் பிடிப்பு யாவும் நீங்கி யாவரும் இறைவனின் குழந்தைகள், எல்லாம் சிவமயம், "ஜீவ சேவையே சிவ பூஜை" என்ற தத்துவத்தின் அடிப்படையில் வாழ முற்படுவான். இப்படி விளையாற்றும் பொழுது மனம் பரிபூரண ஆனந்தத்தை அனுபவிக்கும்.

வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோளை மனம் பற்றிக் கொண்டதும் சஞ்சலம் நிறைந்த உலகம் சாந்தியுடையதாகத் தெரியும். உலகத்தில் உள்ள சாதி சமய பேதங்கள் மனதை அடக்கியவனிடம் இல்லாதொழியும். இப்படிப்பட்ட மனதை உடையவனை இறைவன் விரும்புகின்றார். "யாரிடமிருந்து உலகிற்கு இடர் இல்லையோ, யார் உலகத்தினின்று இடர்படுவதில்லையோ, இன்னும் யார் களிப்பு, கோபம், அச்சம், கலக்கம் இவைகளினின்று விடுபட்டவனோ அவனே எனக்கு உகந்தவன்" (கீதை 12 ஆம் அத்தியாயம் 15 ஆம் சுலோகம்)

மனத்தை அடக்கி பேரானந்த வெள்ளத்தில் திளைப்போமாக. ✶

## காந்திஜியைக் கவர்ந்த...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

சுப்புலட்சுமி. இசைத் துறையிலே மறக்க முடியாத பல சாதனைகளைப் படைத்திருக்கிறார்.

சுப்புலட்சுமி தன் வாழ்வில் கண்ட முக்கிய நிகழ்ச்சிகள் வருமாறு;-

✶ 1947 ஆம் ஆண்டு 'சாவித்திரி' படத்தில் நடிக்க சுப்புலட்சுமி கல்கத்தா சென்று விட்டு திரும்பும் சமயம் புதுடில்லி சென்றிருந்தார்.

பிர்லா மாளிகையில் தங்கியிருந்த காந்திஜியைச் சந்திக்கச் சென்றிருந்தார்

இந்து - முஸ்லிம் கலவரத்தினால் காந்திஜி மனவேதனையில் மூழ்கி இருந்த சமயம்.

முகத்திலே வேதனை ரேகைகளுடன் மாலைப் பிரார்த்தனையில் காந்திஜி கலந்து கொண்டார்.

சுப்புலட்சுமி சில மீரா பஜன் பாடல்களைப் பாடினார். பாடி முடித்த பின்னர் பாபுஜி புன்னகைத்தார். அருகில் இருந்தவர்கள் ஆச்சரியப்பட்டனர்.

இன்றுதான் பல நாட்களுக்குப் பின்னர் பாபுவின் முகத்தில் புன்னகையைக் கண்டோம் என்று அவர்கள் சொன்னார்கள்.

மகாராணா மயங்கினார்

✶ 1940 இல் சுப்புலட்சுமி மீரா படத்தில் நடித்துக் கொண்டிருந்த சமயம் ஜெய்ப்பூர், உடையப்பூர், சித்தூர் ஆகிய இடங்களில் படப்பிடிப்பு நடந்தது

ஜெய்ப்பூரில் தர்பார் மண்டபத்தில் சுப்புலட்சுமியின் இசைக்கச்சேரி ஒன்று நடந்தது. ஜெய்ப்பூர் மகாராணாவும் வந்து இருந்தார்.

இதன் பின்னர் படப்பிடிப்புக்கு குதிரை, யானைகள் தேவைப்பட்டன. எம்.எஸ்ஸின் கணவர் சதாசிவம். மகாராணாவை அணுகி யானை, குதிரைகளைத் தந்து உதவும்படி கேட்டார்.

எம்.எஸ்ஸின் கல்யாணி ராகம் காதுகளிலே சுழல்கிறது. அந்த ஒரு ராகத்துக்காக யானைகள் மட்டுமல்ல, வேறு என்ன வேண்டும் என்றாலும் தருகின்றேன்' —இப்படிக் கூறினார் மகாராணா.

✶ புதுடில்லியிலே எம்.எஸ்ஸின் கச்சேரி நடைபெற்ற சமயம்.

இந்தியாவின் இசைக்குயில் என்று பெயரெடுத்த சரோஜினி நாயுடுவும் கச்சேரிக்குச் சென்றிருந்தார்.

கச்சேரி முடிவடைந்த பின்னர் எம் எஸ். சரோஜினி நாயுடு, விஜயராகவாச்சாரியார் ஆகியோர் பேசிக் கொண்டிருந்தனர்.

எம்.எஸ்ஸின் இசைத் திறமையை அனைவரும் பாராட்டினர்

ஒரு கட்டத்தில் விஜயராகவாச்சாரியார்!

இந்தியாவின் இசைக் குயில் பட்டத்தைத் துறந்து விடுகிறீர்களா?

சரோஜினி நாயுடு:

அதை எப்போதோ துறந்து விட்டேனே! என்றார் நகைச்சுவையாக.

✶ 23 - 10 - 66 இல் ஐ நா சபையில் எம்.எஸ் பாடினார். 31-8-74 இல் இசைப் பேரறிஞர் பட்டம், மகஸாஸே விருதுகள் வழங்கப்பட்டன.

1954 இல் இந்திய அரசினால் பத்மபூஷண் வழங்கி கௌரவிக்கப்பட்டார். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நற்செய்தி
120 சிறும் நிறையுடன் கூடிய புதிய
நியூ மில்க்வைற் சோப்
இப்பொழுது எங்கும் விற்பனையாகிறது.
விலை ரூ 2/00 மட்டுமே
10 நியூ மில்க்வைற் உறைகளை அனுப்பி
அழகிய சாவிவதி ஸ்டிக்கர் ஒன்றைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.
—மில்க்வைற் யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

20 - 09- 1986 சனிக்கிழமை

சிக்கனமே சிறந்த செல்வம்.
மில்க்வைற் நீலசோப் மேலுறைகள்
200 சேகரித்துக் கொடுத்து ஒரு
பாடசாலை பாக்
பெற்றுக் கொள்ளுங்கள்.
-மில்க்வைற் யாழ்ப்பாணம்.

## கம்யூனிஸ்ட்டுகளை அடக்குவாரா அக்கினோ?

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி கொரேஸன் அக்கினோ என். பி. ஏ. என அழைக்கப்படும் புதிய மக்கள் இராணுவ கெரில்லாப் பிரிவுடனும் முஸ்லிம் பிரிவினைவாதக் கிளர்ச்சியாளர்களுடனும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்துள்ளார்.

அமெரிக்காவுக்கு ஒன்பது நாள் உத்தியோக பூர்வ விஜயம் ஆரம்பிப்பதற்கு முன் கொரேஸன் அக்கினோவின் பிரதிநிதிகளுக்கும் கிளர்ச்சிக்காரத் தலைவர்களுக்குமிடையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இந்த ஒப்பந்தங்களை என். டி. எப். என்று அழைக்கப்படும் கம்யூனிஸ்ட்கட்சி கிளர்ச்சிப் பிரிவான தேசிய ஜனநாயக முன்னணி கம்யூனிஸ்டுகள் நாட்டைப் பிடிப்பதற்குப் போராட்டம் நடத்தி வருகின்றனர். முஸ்லிம்கள் தமக்கு தனிநாடு கோரி கிளர்ச்சி செய்து வருகின்றனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம்செய்தும் பிலிப்பீன்ஸில் யுத்தம் ஓயாத நிலையில் கொரேஸன் அக்கினோ தற்போது அமெரிக்காவில் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அக்கினோவின் 60 ஆயிரம் துருப்புகள் இன்னமும் யுத்தமுனையில்தான் இருக்கின்றன.

### மார்க்கோஸ் நிலை

தற்போது ஹவாயில் அஞ்ஞாதவாசம் புரியும் பிலிப்பீன்ஸ் முன்னாள் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸின் வீழ்ச்சி (வியட்நாம்) இன்று கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ் வரலாறு வருகிறது.

ஆனால் பேர்டினன்ட் மார்க்கோஸின் தோல்வி பிலிப்பீன்ஸில் கம்யூனிஸ்ட் ஆதிக்கம் ஏற்படாது தடுத்து நிறுத்தி உள்ளது.

மக்களின் செல்வாக்கு இழந்த மார்க்கோஸ் இன்னும் ஏழு வருடங்கள் பதவியில் இருந்திருந்தால் மார்க்கோஸ் எதிர்ப்பு, கம்யூனிஸ்ட் ஆதரவாக உருப்பெற்றிருக்கும் என்பது அமெரிக்காவுக்குத் தெரியும்.

அதனால்தான் கொரேஸன் அக்கினோவின் தற்போதைய அமெரிக்க விஜயத்துக்கு அமெரிக்க அதிபர் ரொனல்ட் றேகன் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகி

# உலக உலா

எஸ்.பி.சீலன்

நிராகரித்துள்ளது.

கொரேஸன் அக்கினோவின் அமெரிக்க விஜயம் ஆரம்பமாவதற்கு ஒரு நாளுக்குமுன் தேசிய ஜனநாயக முன்னணியின் நிராகரிப்பு அறிக்கை வெளிவந்தது.

கொரேஸன் அக்கினோவின் சமாதான முயற்சி எவ்வளவுதூரம் வெற்றி பெறும் என்பதே இன்று எழுந்துள்ள முக்கிய கேள்வி.

ஆசியாவில் உள்ள ஒரே கிறிஸ்தவ நாடு பிலிப்பீன்ஸ் ஆகும்.

கத்தோலிக்கர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்தநாட்டில் கடந்த பதினேழு வருடகாலமாக கம்யூனிஸ்டுகளும் முஸ்லிம்களும் கிளர்ச்சி நடத்திவருகின்றனர்.

சிறு அடிமையை நாடு அமெரிக்கா.

தென் வியட்நாமில் நாயன்வான் தியூவையும், கம்போடியாவில் (தற்போது கம்பூச்சியா) லொன்நொலையும் சராசரியில் மன்னர் ஷாவையும் அமெரிக்கா இறுதி நேரத்தில் எப்படிக் கைவிட்டதோ அதே நிலைமை தான் இன்று பேர்டினன்ட் மார்க்கோஸுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்காவின் நெருங்கிய நண்பர்களான நாயன்வான் தியூவும், லொன் நொலும் யுத்தத்தில் அமெரிக்கா தோல்வி அடைந்ததை அடுத்து வெளியேறி இருந்தனர்.

அந்தத் தோல்வி இந்தோசீனம் முழுவதும் கேம்பூச்சியா, லாவோஸ், ஈரானுடைய திர்வு மூலமே பிலிப்பீன்ஸில் கம்யூனிஸத்தை வெற்றி கொள்ளலாம் என்று மார்க்கோஸ் ஆட்சிக் காலத்தில் அமெரிக்கா கூறிவந்தது.

தற்போது கம்யூனிஸ்ட் கெரில்லாக்களுடன் ஒப்பந்தத்துக்கு றேகன் நிர்வாகம் ஆதரவு அளிப்பதன் மூலம் கொரேஸன் அக்கினோ அரசுக்கு நிபந்தனை அற்ற முழு ஆதரவைத் தெரிவித்துள்ளது.

பிலிப்பீன்ஸில் கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்துவதில் கொரேஸன் அக்கினோ சட்டப்போரில் வெற்றி பெறுவதிலேயே அவரது எதிர்காலம் தங்கி இருக்கிறது.



### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 20

"எமது பிரதேச தொழிற்றுறை ஆற்றல்களும் எதிர்காலமும்" பற்றி இரு நாள் கருத்தரங்கு இன்று ஆரம்பமாகும்.

யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் முதல் நாள் கருத்தரங்குக்கு கலாநிதி ஏ. சுந்தரலிங்கம் தலைமை வகிப்பார்.

நாளை நடைபெறும் இரண்டாம் நாள் கருத்தரங்குக்கு பேராசிரியர் ஏ. துரைராஜா தலைமை வகிப்பார். (உ-எ)

* * *

யாழ்ப்பாணம் செப். 20

மானிப்பாய் லவ்லீஸ் கழக ஆதரவில் விவசாயக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை நடைபெறும்.

வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் காலை 8-30 மணிக்கு இந்தக் கருத்தரங்கு ஆரம்பமாகிறது.

யாழ் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு எஸ். கிருஷ்ணபிள்ளை உட்பட பல விவசாய அதிகாரிகள் இக் கருத்தரங்கில் உரை நிகழ்த்துவர்.

### நாட்டிய நடனம்

யாழ்ப்பாணம். செப் 20

கலைஞர் வேல் ஆனந்தன் நாட்டிய அமைப்புத் தயாரிப்பான "என்னதான் முடிவு-" நடன நாடகம் இன்று சனிக்கிழமை பிற்பகல் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி கலையரங்கில் பத்தாவது தடவையாக மேடையேறும். (-ஈ)

### பத்திரிகையாளர் பதிவாளராக நியமனம்

யாழ்ப்பாணம், செப். 20

வலிகாமம் வடக்கு பிரிவு திருமணப்(பொது) பதிவாளராகவும் மயிலிட்டிப்பிரிவு பிறப்பு, இறப்புப் பதிவாளராகவும் பத்திரிகையாளர் திரு எம். செல்வராசா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அவரைக் கௌரவிக்கும் நிகழ்ச்சி இன்று சனிக்கிழமை மாலை காங்கேசன்துறை வைரணி செனியூஸ் சாசலிலும் விசேஷ வழிபாட்டு நிகழ்ச்சி வைரணி புனித அந்தோனியார் ஆலயத்திலும் நடைபெறும். (உ-எ)

### கொலைவிலக்கி மாதாவிழா

யாழ்ப்பாணம். செப். 20

யாழ் கஸ்தூரியார் வீதியிலுள்ள கொலைவிலக்கி ஆரோக்கிய மாதா கோவிலின் வருடாந்த திருவிழா உற்சவத்தை முன்னிட்டு இன்று மாலை தேவநற்கருணைப் பவனி நடைபெறவுள்ளது.

### நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், செப்.20

லேடி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இன்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெறும்.

யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தன் பேருரையை நிகழ்த்துவார். கலைப்பீடாதிபதி திரு எஸ். பாலகிருஷ்ணன் தலைமை வகிப்பார்.

## திராட்சையோ திராட்சை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போக வேண்டியதும் இல்லை

கைவன் உற்பத்தி, பதனிடுதல் என்று பல கைத்தொழில்களை ஆரம்பித்தால் ஏற்றுமதி மூலம் வெளிநாட்டுச் செலாவணியும் சம்பாதிக்கலாம்.

தமிழ் மண்ணில் பொருளாதார வளம் எங்கே உண்டு என்று கேட்கும் வீணர்களுக்கு இது நல்ல பதில்.

இதோடும் திருப்திப்பட விவசாயிகள் அவர்கள் தொழில் வளத்தைப் பெருக்கவும், தன்னிறைவு காணவும் ஆரம்ப வழிகாட்டுயாக அமைந்த 'எதிர்காலம் நோக்கி' என்ற பொருட் காட்சியைப் பார்க்க வேண்டும்.

விவேகமும், ஆர்வமும், முயற்சியும், சேர்ந்தால் எதிலும் உயர்ச்சி உண்டு.

## மாகாணசபை அவசரம்

## உலகவங்கியை 'தாஜா' செய்யவா?

என்பாடு, உன்பாடு என்ற கணக்கில 'உடன்பாடு' என்ற வார்த்தை பாவிக்கப்படுகிறது.

அரசு-கூட்டணி இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் தொடங்கும் முன்னரே, உடன்பாடு எங்கும் தருணத்துக்கு வந்து விட்டோம் என்று அமைச்சர் ஆனந்தா கூறினார்.

பேச்சுக்கள் முடிந்து சென்னை திரும்பும் சமயம் 'உடன்பாடு' ஒரு விஷயத்திலும் ஏற்படவில்லை என்று கூட்டணி அறிக்கையை விடுத்தது.

மீண்டும் 'உடன்பாடு' என்ற வார்த்தை பிரயோகம் கடந்த வாரம் பாவிக்கப்பட்டது.

இம்முறை பாவித்தவர் அதி உத்தமர். தர்மிஷ்டர் அவர் தம்மிஷ்டப்படிதான் அச்சொல்லைப் பாவித்தாரா?

80 ஆவது வயதில் காலடி வைத்த தருணத்தில், இனப்பிரச்சினைத் தீர்வில் 90 சதவீதமான உடன்பாடு அரசு-கூட்டணிக்கிடையே ஏற்பட்டுவிட்டது என்று கூறினார்.

மறுகணமே வந்துவிட்டது சென்னையில் இருந்து 'மறுத்தான்'.

உடன்பாடு எந்த விஷயத்திலேயும் காணப்படாத நிலையில் உண்மைக்கு முரணான அறிக்கைகளை விடுத்து பேச்சுக்கள் தொடரும் சூழ்நிலையை குழப்ப வேண்டாம்- இப்படி கூட்டணி அரசியல் குழு அறிக்கை விட்டது.

இதனிடையில்மாகாண சபைச் சட்டமூலம் அவசரம் அவசரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கும் கூட்டணிக்கும் சட்டமூலத்தின் பிரதிகள் அனுப்பப்படவுள்ளன.

அது மட்டுமல்ல, கடன் வழங்கும் உலக வங்கி, சர்வதேச நாணய சபை ஆகியவற்றுக்கும் மாகாண சபைச் சட்டமூலப் பிரதிகள் மாத இறுதி வாக்கில் அனுப்பப்படவுள்ளனவாம்.

90 சதவீதமான உடன்பாடு கண்டாயிற்று என்ற ஜனாதிபதியின் அறிவிப்புக்கும் மாகாணசபைச் சட்ட மூலப்பிரதிகள் உலக வங்கி சர்வதேச நாணய சபை ஆகியவற்றுக்கு அனுப்பப்படுவதற்கும் ஏதும் தொடர்பு உண்டோ?

உண்டு என்ற ரீதியில் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிடுகின்றனர்.

'90 சத வீத உடன்பாடு கண்டாயிற்று' என்று ஜனாதிபதியின் வாயில் இருந்து வந்த வார்த்தைகள், காரணத்தோடுதான் வந்தன.

இவ்வார்த்தைகளைத் தொடர்ந்து, மாகாண சபைச் சட்ட மூலத்தையும் அனுப்பிவைத்து விட்டால், உலக வங்கி— சர்வதேச நாணயசபை ஆகியவற்றைத் திருப்தி செய்து தாஜாபண்ணி விடலாம் என்று கொழு

### உள்ளும் புறமும்

குறுமுனி

ம்பு நினைக்கிறது. காலம் அறிந்து வரும்

சர்வதேச நாணய சபை, உலகவங்கி ஆகியவற்றின் கூட்டங்கள் இம்மாத இறுதியில் வாஷிங்டனில் நடைபெறவிருக்கின்றன. நிதி அமைச்சர் ரொனிடிமெல ஏற்கனவே வஷிங்டனில் உள்ளார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் எந்தப் பேச்சும் "காலம் நேரம்" அறிந்துதான் வருகின்றது அதற்கு இது ஓர் உதாரணம். இந்திய ராஜதந்திரமோ இன்னொரு பாதையில் செல்கிறது.

கொழும்புப் பேச்சுக்களைத் தொடர்ந்து அனுப்பப்பட்ட உருவாக்கங்களில் காணப்படும் 'வார்த்தைப் பிரயோகங்கள்' அர்த்தமுள்ளவையா?, உண்மையான உருவைக் கொண்டுள்ளனவா? என்பதை 'பூதக் கண்ணாடி' வைத்து பரிசீலனை செய்கிறது, இந்திய அரசு

களில் முதலில் 'இடைவெளி' கண்டவர் இந்திய அதிகாரிகள்—

இப்போது கொழும்பு அனுப்பிய உருவாக்கங்களிலே இடைவெளியைக் கண்டுள்ளார்கள்.

வார்த்தைப் பிரயோகங்களில் காணப்படும் 'இடைவெளி'கள் நிரப்பப்பட்ட பின்னர்தான் தீர்க்கப்படவே முடியாத பிரச்சினைகளாகக் கருதப்படும் தமிழ்மொழி மாநில அமைப்பு, காணி ஆகியவைவை ஆராயும் 3 ஆம் கட்டப் பேச்சுக்கான 'நாளும் நட்சத்திரமும்' தேர்ந்து எடுக்கப்படும்.

அந்தப் பேச்சுக்களில் போராளிகளே முக்கிய கதாநாயகர்கள்.

### போராளிகள் ராஜதந்திரம்

போராளிகள் இராஜதந்திரமே இன்னொரு பாதையில் செல்கிறது.

'திம்பு'வில் எந்தக் கட்டத்தில் விட்டோமோ அந்தக் கட்டத்தில் இருந்து நாம் பேசத் தயார்.

—இப்படி தம்பிமார்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

இலங்கை அரசுடன் நாம் பேசுவதாக இருந்தால் கொழும்பிலே அரசு—கூட்டணி பேசிவிட்ட திலிருந்து பேசத் தயார் இல்லை.

திம்புவில் நாம் பேசிவிட்டதில் இருந்துதான் பேசுவோம்

தம்பிமார் இந்த நிலையை எடுத்துள்ளனர் என்பது கடைசியாக வந்த தகவல்.

இந்த நிலையில் இந்திய அரசு, தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனின் வருகையை எதிர்பார்த்து இருக்கிறது.

'முன்னெழுத்தின் முச்சிலே தான் இனிப்பேச்சு' என்பதை இந்த நிலை கொழும்பு போசனை எடுத்துக் காட்டுகிறது.

யாழ் மாவட்ட அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்
பதவிவெற்றிடம்

1.உள்வாரிக் கணக்குப் பரிசோதகர்

கல்வித்தகைமை:- I. C. M. A. Part I Professional stage or Chartered Accountant, Licenciate exam. அல்லது

ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தி அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியுடன்

அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்குப் பரிசோதனை சம்பந்தமான மேற்பார்வை மட்டப் பதவியொன்றில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

அரசாங்கத் திணைக்களத்தில் கணக்காளர் பரீட்சையில் சித்தியடைந்து 5 வருடங்களுக்கு குறையாமல் கணக்காளர் பதவி வகித்த அனுபவம் பெற்ற இளைப்பாறியவர்களும் சிறந்த உடல் ஆரோக்கியம் உள்ளவர்களும். 2 வருட ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்ற விண்ணப்பிக்கலாம். இவர்களுக்கு வயது எல்லையில் சலுகை அளிக்கப்படும்.

சம்பளம்;- ரூபா 1313/— (மாதமொன்றுக்கு எல்லாப்படிகளும் உட்பட)

வயது :- 25 — 45 வரை.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி அலுவலகத்தில் கணக்குகளைப் பரிசோதனை பண்ணுவதுடன் சகல கிளைகளுக்கும் சென்று கணக்கு, பொருள்களைப் பரிசோதனை செய்தல் வேண்டும். தேவையான பொழுது அறிக்கைகள் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. கணக்குப்பதிவாளர்

கல்வித்தகைமை:- ஐக்கிய இராச்சியக் கணக்குப்பதிவாளர் நிறுவனத்தில் இறுதிப் பரீட்சையில் சித்தி அல்லது I. A. B. அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி.

அனுபவம்:- அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு அலுவல்கள் பற்றிய 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

சம்பளம்:- ரூபா 1213/- (மாதமொன்றுக்கு எல்லாப்படிகளும் உட்பட)

வயது:- 25—45 வரை

விண்ணப்ப முடிவு திகதி:- 03.10 1986

தலைவர்

திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

## தமிழர்....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

முறை ஆகியவை குறித்து போதிய முயற்சிகள் பொருட்காட்சியில் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அது ஒரு குறையாகத் தெரிந்தது.

இந்த விடயத்தில் 'கலைஞானி' எடுத்துக் கொண்ட முயற்சிகள் மட்டும் பாராட்டுக்குரியனவாக இருந்தன.

### விவசாயம்

விவசாயத்துறையிலும் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. விவசாய அபிவிருத்திக்கான நவீன முறைகள் குறித்து மேலும் பல செய்முறைகளைத் தந்திருக்கலாம்.

எனினும் குறைந்த செலவில் சிறந்த பயன் தரக்கூடிய விவசாயக் கருவிகளைத் தயாரித்தல், அவற்றை உபயோகித்தல் ஆகியவை குறித்து பயனுள்ள விடயங்கள் காட்டப்பட்டன.

எமது மக்களின் பாதுகாப்பு, முதலுதவி முயற்சிகள் — இவை இரண்டு குறித்தும் சிறப்பாக மக்கள் மத்தியில் விளக்கமளிக்கப்பட்டு வருகிறது. மேலும் பல காட்சிப் பொருள்கள், விளக்கங்கள், அங்கு இடைத்தன.

எமது கல்வி அமைப்பு முறை தவறான போக்கில் இருப்பது பொருட்காட்சியில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது ஆனால் அதனைச் செழுமைப்படுத்தும் ஆக்கபூர்வமான முறைகள் பற்றி தகவல் ஏதும் அங்கு இல்லை.

எனினும் ஒட்டுமொத்தமாக எடைபோடும் போது "எம் மக்களின் எதிர்காலத்தை நோக்கி......" நடத்தப்படும் இந்த பொருட்காட்சியில் "ஒளிமயமான எதிர்காலம்" தெரிகிறது மக்களின் போராட்டத்தில் இது ஒரு மைல்கல். ★

## மாநில சுயாட்சி . . . . .

(7ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையிலுள்ள இந்திய தூதுவருக்குமிடையில் இனப்பிரச்சினை சம்பந்தமான கருத்துப்பரிமாற்றம் ஏற்பட்ட பொழுது இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு 1958,1961,1977,1983ல் இழைத்த அபாண்டமான அனர்த்தங்களைப் பற்றிச் சுடச் சுட கூறியுள்ளதிலிருந்து தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் துன்புறுத்தப்பட்டுள்ளார்களென்பதை சந்தர்ப்ப ரீதியாகக் கூற உந்தப்படலானேன்.

### அநுராவின் ஓலம்

உண்மையோ, இங்ஙனம் வெள்ளிடை மலை போல் இருக்கக்கூடியதாக, ஓர் எதிர்க்கட்சித் தலைமைப் பதவி வகிக்கும் பொறுப்பு வாய்ந்தவர், இன்றைய அவலநிலைக்கு மூலகாரணம் என்ன என்பதை அவர் சிந்தனைக்கு எடுத்து ஆராயாது,மனம் போன போக்கில் கூறியிருக்கிறார்

"முதலாவதாக பயங்கரவாதிகளை நிர்மூலமாக்கிய பின்னரே இனப்பிரச்சினை ஆராயப்படவேண்டும்— எனப் பொறுப்புணர்ச்சிக்கு அப்பால் பகர்ந்தமை விந்தையிலும் விந்தையாகும்.

### பயங்கரவாதம்

அரசுக்கும், தமிழ் தலைவர்களுக்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றுக் கொண்டிருக்கும் பொழுதே அரச படையினர் அகதி முகாம் ஒன்றினுள் புகுந்து தஞ்சம் புகுந்திருந்த 67 அப்பாவி மக்களை வதைத்துக் கொன்றனர்.

மேலும் சர்வதேச சட்டத்தை மீறி மன்னார் பகுதியில் 53 பொது மக்களை குண்டு வீச்சு விமானங்களினால் தாக்கி அலற அழித்தனர்.

இச்சம்பவங்களை இன்றைய நாகரிக உலகம் உன்னி சிந்திப்பதற்குமே வெட்கமுறுமன்றோ!

ஆகவே பயங்கரவாதிகளென அநுரா அவர்களால் குறிப்பிடப்பட்டவர்கள் 'எவராகும்' என்பதை இக் கட்டத்திலாவது உணர்ந்து கொண்டு அவர் தனது கருத்தை மாற்றிக் கொள்வாரா?

ஆனால் இவ்வளவு அட்டூழியங்கள் அப்பாவித் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கட்டத்திலும் கூட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள், பகிரங்கமாக ஆட்சேபமும் எச்சரிக்கையும் தெரிவித்து வெளியேறாது ஒட்டாண்டிகள் போல் தொடர்ந்தும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தமையின் மர்மம் தான் என்ன?

உண்மையாகவே ஜனாதிபதி அவர்கட்கு,விசேடமாய் அந்நிய நாட்டுஸ்தானிகர்களுக்கு இப் பண்பாட்டுக்கப்பால் நிகழ்த்தப்பட்டனவற்றைச் சுட்டிக் காட்டி வெளியேறியிருந்திருந்தால் — ஏனைய இராசதந்திர வட்டாரங்கள் மூலம் கூடிய உதவி பெற்று இன்று எங்கள் நிலையைப் பலப்படுத்தியிருக்கலாமன்றோ!

மேலே சமர்ப்பிக்கப்பட்டுள்ள சரித்திரச் சுருக்கத்திலிருந்து, இந்நாட்டுப் புராதன இனங்களில் ஒரு சாராரான தமிழருக்கு நியாயபூர்வமாக தனிநாட்டுக்கு உரிமை உண்டென்பதை எவரும் மறுக்க முடியாது.

ஆனால் இன்றிருக்கும் இனக் கொந்தளிப்பையும், எதிர் நோக்கும் பயங்கர விளைவுகளையும் நீக்குவதற்காகவேனும், வடக்கு- கிழக்கு இணைந்த மாநில சுயாட்சித் திட்டத்தையேனும் அமைப்பதற்கு இந்தியப் பிரதமர், அமரர் திருமதி இந்திரா காந்தி ஆரம்பித்த நடவடிக்கையை மீண்டும் கையாண்டால் (இக்கூற்று இரு சாராராலும் பெருமளவு ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றே சொல்லலாம்.) எங்கள் நாடு பேரழிவிலிருந்து காப்பாற்றப்படும். அன்றியும் எங்கள் நாட்டு அரசியல்வாதிகளுக்கும் அழியாப் புகழும் மலருமன்றோ!

## தமிழீழம். . .

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டுக் கொண்டு இருந்த சமயமும் இலங்கையில் இருந்த 'கனமற் போனவர்'கள் சம்பந்தமான முறைப்பாடு கள் வந்துகொண்டிருக்கின்றன. [illegible] சர்வ [illegible] தனது அறிக்கையில் இறுதியாகக் குறியிருக்கிறது.

### சைக்கிளோட்டம்

சுன்னாகம், செப். 20

உடுவில் வலயக்கல்வி முன்னேற்றக் கழகத்தினர் இன்று சனிக்கிழமை சைக்கிள் ஓட்டப்போட்டியை ஒழுங்கு செய்துள்ளனர்.

காலை 6 மணிக்கு யாழ் அபிவிருத்திச் சபையின் உடுவில் உப அலுவலகத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்படவுள்ள சைக்கிள் ஓட்டப் போட்டியில் பெருந்தொகையானோர் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-27)

நீத்தார் பட்டியல்

### ம. மனவல் மரியாம்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர்)

அவர்கள் காலமாகிவிட்டார்

இவர் சசிகடா மங்களநாயகி (ஆசிரியை சென் ஜேம்ஸ் மகளிர் மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், மரினா ரோஸ் நிலா, (Holy Cross Convent) சூரியஜீவன் (யாழ் பல்கலைக்கழகம்) டேரனால்ட் நிதின், சரத்ஜீவன் (சென் பற்றிக்ஸ் கல்லூரி) சக்திஜீவன் (சென் பற்றிக்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி பிலோமினா ஜோர்ஜ், ம. அலோசியஸ், (முகாமையாளர் உதவி மேயர் யாழ்ப்பாணம்) ம. டோமினிக், திருமதி குணமணி சேவியர், திருமதி Dr. மகேஸ் ராஜேந்திரா (Goodwill Clinic Batticaloa காலஞ்சென்ற ம. வின்சென்ற் மனுவேல் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 20 - 09 - 1986 சனிக்கிழமை. மாலை 3-45 மணிக்கு இல 5, சென். பற்றிக்ஸ் வீதியிலிருந்து புனித சேர்ஞ்சேனி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், இதாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியீட்டு திகதி 20 • 09 • 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org